4642 M

சந்தா விபரம்
—
1 ஆண்டு ரூ 7,
½ ,, 3 8 0

திராவிடநாடு

16 பக்கம்
விலை
இரண்டணா

இலங்கை 15 சதம் | மலாய்நாடு 12 காசு

மலர் 8 | 12--3--50 | இதழ் 37

கோட்டை சரிகிறது!



செயல் வீரன்—மோலியர்

[ராஜமாணிக்கம்]

"படுக்கை விரிக்கத்தான் நான் ஒருவன் தானா இருக்கிறேன், இப் பரந்த பாரிஸ் நகரில்! பதினைந்காம் லூயியும் பராரியல்லவே என்னைப் போல! நானில்லையென்றால் வேறொரு வன் விரிக்கிறான்!"

என்று வேலையைவிட்டு நீங்கினான். கல்லூரிக்குச் சென்றான் — கலைகள் பயின்றான். சட்டம் கற்றான், வக் கீல் ஆனான். அத்தொழிலும் அவ னைக் கவரவில்லை!

"பொய்மையை மெய்யாக்கும் இப் 'புனித' வேலையில் எத்தனையோ ஆயிரம் பேர் போட்டியிட்டுக் கொண்டு கிடக்க, எனக்கும் ஏன் அத் தொழில்? வேண்டாம்—முடி யாது!"

என்று கூறினான். சமுதாயம், கலைந்துபோன மண் மாளிகையாகக் காட்சி தந்தது, அழுகிழந்து அழு கிப் போன பிரேதம் ஆக அவன் கண்களில் காட்சியளித்தது, இதயத் தைக் குமுறச் செய்தது. 'என்வேலை அதுதான்—இந்த சீர்கெட்ட சமு தாயத்தைச் செப்பனிடுவதுதான்' என்ற உறுதியை உண்டாக்கியது. நடிகனானான், நாடகமாடத் தொடங்கி னான், தானே எழுதி, தானே நடித்து, தன் மக்களுக்கு சேவை செய்யப் புறப்பட்டான!

X X X

பிரான்ஸ் நாட்டுச் சரித்திரத்தில் மிகவும் குறிப்பிடத் தக்கது பதி னேழாம் நூற்றாண்டு—ஏன்? பதி னேழாம் நூற்றாண்டு உலக நாடு களின் சரித்திரத்திலேயே முக்கியத் துவம் வாய்ந்த நூற்றாண்டாகும்—புதுப் புது விஞ்ஞானக் கருவிகளும் இயந்திரங்களும் கண்டுபிடிக்கப்பட்ட துப், அரசியல் துறையிலும், பல பல கிளர்ச்சிகளும் புரட்சிகளும் புயல் போலக் கிளம்பிக்கொண்டிருந் தும் அப்போது!

படாடோபமும், விருந்தும், கேளிக்கையும் ஒருபுறம் களி நடனம் புரிந்துகொண்டிருக்கவும், பசி பட் டினி, சாக்காடு மற்றொருபுறம் தலை விரித்தாடவும் செய்துகொண்டிருக் கும் போது தே மன்னனும் தன் மணி முடியைத் தலையில் அழுத்திப்பிடித் துக்கொண்டு அதிகாரத்தோடு ஆர்ப் பரித்துக்கொண்டிருந்தான்!

"நானே பிரான்ஸ்! எனது ஆட் சித் திறத்தை அறிந்துகொள்வ தற்குத்தான் மக்கள்!" என்று கூறிக் கொண்டு ஆட்சி புரிந்தவன் பதினான் காம் லூயி.

ஆட்சி செய்யும் மன்னன் விருந்து நடத்துவதிலும் கேளிக்கை புரிவதி லும் தன் காலத்தைச் செலவழித் தான். செல்வம் கொழித்த பிரபுக் கள் அவனுக்கு நல்ல கூட்டாளிகள். பதினேழாம் நூற்றாண்டில் பிரான்ஸ் தேசத்துச் சமுதாயம் மிகவும் சீர் கெட்டேயிருந்தது. நாட்டில் போலி களும் விஷமிகளும் மூடநம்பிக்கைக் காரர்களும் நிறம்பியிருந்தனர் இந்த நிலையை நாட்டுமக்களுக்கு எடுத்துக் காட்டி திருத்த முயன்றவன்தான் மோலியர் என்றழைக்கப்பட்ட ஜான் பாப்தீஸ்து மோகலின் இவன் 'மோலியர்' என்ற புனைப்பெயரில் தான் இன்று உலகத்துக்குக் காட்சி யளிக்கிறான்.

மோலியர் 1622 ஆம் ஆண்டு ஜன வரி மாதத்தில் பாரிஸில் ஒரு சிறு வீட்டில்பிறந்தான். இவனது தந்தை பெயர் ஜான். தாய்பெயர்மேரிகிரஸே சாதாரண ஏழைக் குடும்பந்தான். மோலியரின் தந்தைக்கு பதினாலாம் லூயி மன்னனிடம் உத்தியோகம்! அரசனுக்குப் படுக்கை விரிப்பதும, சுருட்டி வைப்பதும்! அரசன் வேறு ஊருக்குப்பிரயாணமானால், அவனது படுக்கைகளை இவனே தூக்கிச்சென்று அங்கு அரசனுக்கு விரிக்கவேண்டும்! இன்னும் அரசனுக்கு வேண்டிய வச திகளையெல்லாம் செய்து கொடுக்க வேண்டும். ஆக அரசனின் எடுபிடி! இதனால் வரும் சிறு ஊதியம் ஜானின் குடும்பத்தை ஓட்டிச் சென் றது.

தந்தைஜானுடன், சிறுவன் மோலி யரும் ஆங்காங்கு செல்வான். எனவே, பலருடனும் எப்படிப் பழ குவது, நெஞ்சில் ஆசையில்லையென் றாலும் எதிரேயிருப்பவருக்கு வெறுப்பேற்படாது எப்படி 'ஆசை யுள்ளவனைப்போல நடிப்பது' என்ற பழக்கம் ஏற்பட்டது.

பிரான்ஸ் ஒரு கத்தோலிக் நாடு. பார்க்குமிடமெல்லாம் பைபிள்படிப் பவர்களின் கூட்டந்தான்! அந்தக் கூட்டத்தில் மோலியரின் தாயுமிருப் பாள். பைபிள்படிப்பதில் அவளுக்கு அளவிலா ஆனந்தம். தன் பிள்ளை யாகிய மோலியருக்கும்பைபிள்படிக்க வேண்டியதின் அவசியத்தை வலி யுறுத்துவாள். ஆங்கங்கே நடக்கும் நாடகங்களிலும் மோலியர் அதி சிரத்தை எடுத்துக் கொண்டு நடிக்க ஆரம்பிப்பான். பிரான்ஸ் தேசத்தில் அப்பொழுது கிரேக்கநாட்டு அலெக்சாண்டர், ரோம்நாட்டு ஜூலியசிசர் போன்றாரின் வீரச தங்கள் நாடகங்களாக நடிக்கப் பட்டன!

மோலியர் பத்து வயதாகும் போதே தாய் இறந்து விட்டாள். தந்தையும் மறுமணம் செய்து கொண்டான். மூன்று ஆண்டுகள் கழிந்து தந்தையும் இறந்துபோனன் பதின்மூன்று வயதிலேயே தாய் தந் தையர்களை இழந்த அனாதையானான் மோலியர். தந்தையின் மூலம் ஒன்றுமில்லை என்றாலும் தாயாரின் மூலம் கொஞ்சம் நிலம் சொத்தாக இருந்தது. அதன் மூலம் மோலியர் கொஞ்சம் படிக்க முடிந்தது. மோலி யருக்கு வேலையும் கிடைத்தது அரண்மனையில் அரசனுக்குப் படுக்கை விரிக்கும் வேலைதான் அந்த வேலையை மோலியர் சிறித காலம் செய்து வந்தான். படுக்கை விரிக்கும் வேலை மோலியருக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை வேலையை உதறிவிட்டு 'கிளா மோந்து' கல்லூரியில் சேர்ந்து கல்வி பயின்றான். லத்தீன், கிரீக் பிரெஞ்சு முதலிய மொழிகளில் மோலியருக்கு நல்ல பாண்டித்திய உண்டு. தத்துவம், பௌதீகம் மு

(13-ம் பக்கம் பார்க்க)



கோட்டை சரிகிறது!

(அறிஞர் அண்ணா)

பயில்வான்.

கோடையிடி.

விபூதி.

X X X

இப்படி ஒரு விளம்பரத்தைக் கண்டால் மக்களிலே பலருக்கு—பலவித ரசனையுள்ளவருக்கு — ஆசையும் ஆவலும் பிறக்கும்! வியப்புடன் விளக்கம் விரும்புவார்கள் 'எங்கே குஸ்திச் சண்டை'? எவருடன் எந்த பயில்வான் குஸ்திபோடப் போகிறார்! டிக்கெட் உண்டா?' என்று—குத்துச் சண்டையில் பிரியம் உள்ளவர்கள்.

கோடையிடியைப் போல் குமுறிச் சிறப்பாடும் பாகவதர்கள் மீது பற்றுள்ளோருக்கு, அவரது சங்கீத தேதி எப்போதாம், எந்த இடத்திலாம் என்று கேட்கத் தோன்றும்.

விபூதியால் வேண்டியதைச் சாதித்து, இம்மையில் சுகமும் மறுமையில் பாவ விமோசனமும் பெறலாம் என்று கூறும் பக்த சிரோன்மணிகள் பரவசத்துடன், 'எந்த ஊர் விபூதி? பழனியா—திருச்செந்தூரா—காளிகோயிலா — சிவன் கோயிலிலிருந்துவந்ததா' என்று கேட்பர்.

இம் மூன்றும் மூன்று ரகம்! பயில்வானுடைய உத்துழைப்பு கோடையிடியாருக்கோ, விபூதியினுடைய வீர சாமர்த்தியம் பயில்வானுக்கோ வேண்டியதில்லை—அவசியமில்லாதவை — ஒன்றுக்கொன்றும் தொடர்பில்லாதவை. எனினும் இம் மூன்றையும் ஒரே இடத்தில் காணலாம்!—பயில்வான் கருப்பண்ணன், கோடையிடி இராமசாமி, விபூதி வீரமுத்து இவர்கள் இந்த இடத்திலே வந்து சேர்ந்து நிற்பார்கள் என்று விளம்பரம் செய்தால் — இதென்ன வேடிக்கையாகயிருக்கிறதே, விபூதியாம் கோடையிடியாம் பயில்வானும் — என்ன விசேஷம்? சரி, எதற்கும் போய்த்தான் பார்ப்போமே! என்ற ஆசை பலருக்கு எழும்பலாம்!

X X X

'சாவு வீட்டில் சங்கீத கச்சேரி',

இப்படி ஒரு 'பிட் நோட்டீசை'க் கண்டால், முதலில் சிரிப்பு வரும்—பின்னர் இது என்ன. வேடிக்கையாகயிருக்கிறதே! சாவு வீட்டில் சங்கீதமா? என்று ஆத்திரம் வரும். சிறிது நேரம் சென்றதும் சரி என்னதான் நடக்கிறது, அங்கு, போய் நாமும் பார்த்துத்தான் வருவோமே என்று ஆசை தூண்டும்!

* * *

பயில்வான் விளம்பரமும் சாவு வீட்டில்சங்கீதகச்சேரிச்செய்யும் தகவலும் நமதுகற்பனையிலே உதித்தவையல்ல, காங்கிரஸ்கட்சியின் சில பிரச்சாரக்காட்சிகள்! மக்கள்மன்றத்திலே பல விஷயங்கள் குறித்துப் பிரசாரம் செய்யும் இடமான பொதுமேடைக் காட்சிகள்! சிரிப்பு வரும் பலருக்கு—உண்மையில் இந்தக் காட்சிகள் பற்றி வந்த தகவல்களைக் காணும்போது நமக்கு சிரிப்பு வரவில்லை, சீற்றம்கூட வரவில்லை — சிந்தாகூலமே ஏற்படுகிறது. பூலோகத் தவப் புதல்வர்கள் நிரம்பியிருப்பது, 'புண்ணியப் பாதை' காட்டுவது, என்றெல்லாம் போற்றி மக்கள் மன்றத்தில் மகத்தான சக்தியைப் பெற்ற காங்கிரஸ் கட்சிக்கா இக்கதி? —எப்படி வளர்ந்தது, இந்த அரசியல் கட்சியின் முடிவு இவ்வளவு வேகமாக விரையும்படி? ஏன்? என்ற கேள்விகளே, இதயத்தில் எழும்பலாயின.

பயில்வான், கோடையிடி, விபூதி இவர்கள் மூவரும் சில வாரங்கள் முன் பிரச்சாரம் செய்தார்களாம்—நேனி—என்ற ஊரில்! எப்படிப்பட்ட பிரச்சாரம்—ஆளும் கட்சியாகியஎங்கள் காங்கிரஸ் இதுவரை இவ்வளவு நன்மைகளை செய்திருக்கிறது, இன்னும் செய்ய இவ்வளவு திட்டம் வைத்திருக்கிறது என்றல்ல!

எதிர்க்கட்சியாகிய திராவிட முன்னேற்றக்கழகத்தை எதிர்ப்பதற்காக, விபூதியையும் கோடையிடியையும் பயில்வானையும் கூப்பிட்டு கூட்டம் நடத்தியிருக்கின்றனர்— அவ்வூர் காங்கிரஸ் நண்பர்கள். அதேபோல, கடந்தவாரம்,

'திராவிட முன்னேற்றக் கழகப் போய்ப் பிரச்சாரமும் சரத் பாபுக்கு அனுதாபமும்!

இப்படி ஒரு விளம்பரம் செய்து, கூட்டம் கூட்ட முயன்றிருக்கிறார்கள்—மதுரையில்!

சாவுவீட்டில் சங்கீதக் கச்சேரி! —நடத்தப்படும் என்று விளம்பரம் செய்தும், கூட்டம் கூட வில்லையாம். கூட்டத்தைக் கூட்டுவதற்காக பயில்வான், விபூதி கோடையிடி அடைமொழிப் பெயர் காட்டியும், சரத்பாபுக்கு அனுதாபம் தெரிவிக்க, 'திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொய் பிரச்சாரம் பற்றி' பேசப்படும் என்று 'போர்டு' போட்டும், பாவம்! கூட்டம் கூடவில்லையாம்! முறையே அந்தந்த ஊர்களில்!

*

காங்கிரஸ்—இந்தியாவின் அரசியல் கட்சிகளில் மிகவும் பெரியது, பாமரமக்களின் மகத்தான சக்தி நிரம்பியது — இதை மறுக்க முடியாது! சக்தியும சாமர்த்தியமும் நிரம்பியது என்று கருதப்பட்ட காரணத்தினால்தான், மக்களின் மகத்தான பலத்தைப் பெற்றது—வெள்ளையனை வெளியேற்றியது, ஆட்சி பீடத்தில் அமர்ந்தது.

இந்தியாவின் ஏக ஜனக்குரல்-காங்கிரஸ் தான் என்று மார்தட்டிப்பேசி

யிருக்கிறார்கள் காங்கிரஸ் தலைவர்கள். இன்னும் மனதை விட்டு மறைந்து விடவில்லை—அந்நிகழ்ச்சிகள்.

மக்களின் மகத்தான பலம் காங்கிரசுக்கு இருந்தது இதை நாம் மறுக்கவும் இல்லை.

பலம், மதிப்பு, பாராட்டு, புகழ்ச்சொல் நிறைந்து கிடந்த காங்கிரஸ் கட்சியினர், இன்று கூட்டம் நடத்த 'பயில்வான்'களைப் பிடிக்கின்றனர், 'விபூதி வருகிறது' என்று விளம்பரம் செய்கின்றனர். திராவிட முன்னேற்றக்கழகம் குறித்து 'திட்டு விழா' நடத்தப் போகிறோம் வாரீர்! அதைக் காணீர்! என்று விளம்பரம் செய்கின்றனர்; அரசியல் உலகைப் 'போட்டா போட்டி' 'சதாரம்' நடத்தும், இடம் என்று எண்ணிக்கொண்டு!

தூத்துக்குடி காங்கிரஸ் இளைஞர் மாநாடு.

தென்னாற்காடு மாவட்ட காங்கிரஸ் மாநாடு.

காமராஜ்—மந்திரிகள் சுற்றுப்பயணம்

எல்லாம், கூட்டமில்லாமல், நடைபெற்றிருக்கின்றன—கூட்டம் கூடவில்லை, மக்கள் உதாசீனம் செய்கின்றனர், புறக்கணிக்கின்றனர், மகானுபாவர்கள் என்னத்தைப் பேசி சாதித்துவிடப் போகிறார்கள், எல்லாம்தான் கண்முன் பார்க்கிறோமே என்ற அலட்சியத்தால், ஆர்வக் குறைவால், ஆத்திரத்தால்!

* * *

மக்கள் மன்றத்திலே இந்தப்புது நிலை யேற்பட்டிருக்கிறது, காங்கிரசுக்கு! எத்தனையெத்தனை பத்திரிகைகள்—வார இதழ்கள், மாதவெளியீடுகள்! வானொலி—சிறுசம்பவத்தைப் பெரிதெனக் காட்டும் பிரச்சார பீரங்கி! இவ்வளவிருந்தும், மதிப்பு மறைகிறது! கண்ணியம் காற்றுத் தூசியாகி வருகிறது!

ஆனந்த விகடன், கல்கி, பிரசண்ட விகடன், தமிழ்மணி, இவை எதிர்க் கட்சிப் பத்திரிகைகளல்ல அன்று முதல் இன்று வரை 'தேசிய' வார ஏடுகள் தான் — காங்கிரஸ் புகழ், தலைவர்கள் சிறப்பு பற்றி பரணி பாடுபவனதான்! எனினும், இன்று இவைகளிலே கிண்டல், கேலி, கண்டனம்!

தினமணி தீட்டுகிறது பலதடவைகளில் காங்கிரஸ் போக்கைக் கண்டித்து, ஹிந்து அறிவுரை கூறுகிறது 'ஆகாது இந்தப் போக்கு' என்று சொல்லி, மித்திரனில் சித்திரம், தினசரியில் தீப்பொறி—இன்று காண்கிறோம். காங்கிரஸ் போக்கு குறித்து, இந்தப்பத்திரிகைகளிலே கண்டனங்கள் — எதிர்பாராதது, யாரும் நினைத்திருக்கவும் முடியாதது!

"தமிழ்மணி"-தலைப்பில் மூவர்ண அசோகச் சக்கரக் கொடியைச் சம்பிரமாகப் பொறித்துக்கொண்டு வெளிவரும் தேசியவார வெளியீடு. அது தீட்டுகிறது,

"இவர்கள் கண்ணோட்டமெல்லாம் சுயநலத்தில் தான், பதவியில்தான். இன்று பதவியிலிருக்கும் மந்திரிகளை எடுத்துக்கொள்ளுங்கள்; தமிழ்நாட்டிலே இருக்கும் தியாகிகளை எடுத்துக் கொள்ளுங்கள், தலைவர் காமராஜ நாடாரைத்தான் எடுத்துக் கொள்ளுங்கள். அவர்கள் குறிக்கோள் எல்லாம் எது? பதவி ஒன்றுதான், பதவியைக் காப்பாற்றிக் கொள்ள அவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்வார்கள். எந்தச் சூட்சிக்கும் அவர்கள் தயார்!"

"காங்கிரஸ் தியாகிகளிடமும் ஊழியர்களிடமும் செல்வாக்கிழந்த தலைவர்கள் புதுப்புது மகா நாடுகளையும் சங்கங்களையும் கூட்டி ஆதரவு தேடி வருகிறார்கள்! இப்படி எவ்வளவு காலத்துக்கு ஓடிக் கொண்டிருக்க முடியும்? தூத்துக் குடியிலே கூடிய வாலிபர் மகாநாடும் இத்தகையதுதான்."

"நேற்று வரையில் நம்மைப்போல் சாதாரணமனிதர்களாகவே காணப்பட்ட தலைவர்களும், மந்திரிகளும் இன்று பதவிக்கு வந்ததும் அவர்கள் மனிதர்கள் என்பதையே மறந்து விடுகிறார்கள்......அலாதித் திமிர் தலைக்கேறி விடுகிறது!"

காங்கிரஸ் ஏடு தீட்டுகிறது, தமிழ்மணியின் வேக நடை மட்டுமல்ல இத்தனை ஆத்திர எழுத்துக்களைகொண்டது, விவேக நடையுடையோர் என்று கூறப்படும் 'கல்கி' 'ஆனந்தவிகடன்' தீட்டும் சோக எழுத்துக்கள், இன்னும் வேடிக்கை நிறைந்தவை.

சுய நலம்

பதவிப் போட்டி

மக்களை மறந்தது

இந்தக் குற்றச் சாட்டுகள் தான், இதுபோன்ற தேசிய வெளியீடுகள், காங்கிரஸ் ஏடுகள் கூறுபவை. கனல் கக்கிகளாக இன்று காட்சியளிக்கின்றன!

காங்கிரஸ் பாட்டைப் பாடினால், இனி பத்திரிகை ஓடாது, மக்கள் கையிலே கூட பத்திரிகைகள் நடமாடாது—காங்கிரசைப் போலவே நாமும் ஆகிவிடுவோம் என்ற கருத்துடன் தான், இவைகள் இன்று கனல் கக்கிகளாகிவிட்டன என்று நாம் கூறத் தயாராயில்லை!

என்றாலும், மக்கள் மன்றத்தின் அதிருப்தியை எதிரொலிக்கும், விருப்பமில்லாத பாதையில், இவைகள் இன்று ஈடுபட்டுவிட்டன. கேலிச் சித்திரம்—காங்கிரஸ் ஆட்சி குறித்துத் தீட்டினாலே 'ரசிக்கிறார்கள் மக்கள்' என்ற நிலைமை வளர்ந்துவிட்டது!

ஆளவந்தாரின், திறமைக் குறைவைத் தீட்டுவதுதான் 'நல்ல' தலையங்கம் என்ற எண்ணம் அந்தந்த ஆசிரியர்கள் உள்ள இடத்தில்! 'காங்கிரஸ் ஜெயிக்குமா? தோற்குமா?' என்ற தலையங்கங்கள்!

எதிர்பாராதது; ஆனால் நடக்கிறது!

X X X

வேதனையும் சோதனையும் நிறைந்த சுரங்கத்திலே இறங்குகிறான் — 'தொல்லைகளா? துணிவிருக்கிறது! கஷ்டமா—தாங்க உடலிருக்கிறது! கொடுமைகளா—வீரமார்பு இதோ!' என்று கூறிக்கொண்டு சுரங்கமிறங்கி தங்கம் கொண்டு வந்து தருவான் என்று எண்ணிக் கிடக்கின்றனர், வெளியே அவனை அனுப்பியவர்கள்! தங்கமும் கிடைத்தது, கஷ்டங்களைத் தாங்கி கனிக்குள் சென்றவன் தங்கம் கொணர்ந்தான்—ஆனால் சொன்னபடி செய்யவில்லை! ஊராருக்காக என்று சொல்லிக் கொண்டு, ஊரார் ஒத்துழைப்புடன் கனிக்குள் சென்ற அவன், தங்கம் கிடைத்ததும் தடுமாறி ஊராரை ஏமாற்ற நினைத்து, கிடைத்ததைச் சுருட்டிக்கொண்டு போவோம் என்று எத்தனித்தால், நிலை எப்படியிருக்குமோ, அதுவே இன்று பிரதி பலிக்கிறது நாட்டில்—மக்கள் மன்றத்தில்!

சுயராஜ்யம் என்ற சுகராஜ்யம் அமைக்கப் போவதாகக் கூறினர் காங்கிரஸ் கட்சியினர்—சொல்லியது போல சுயராஜ்யம் அமைத்தனர்—ஆனால் அது, சுகராஜ்யமாக ஆகவில்லை—ஆனால் சு...ய...ராஜயமாகி விட்டது! திசை மாறிவிட்டது, சுனிக்குள் இறங்கி கைக்குத் தங்கம் கிடைத்ததும் அதைக் கைவிடக் கூடாது, நமக்கே ஆக்கிக்கொள்ள வேண்டும், அத்தங்கத்தால், எவ்வளவு பயன்பெற முடியுமோ அவ்வளவையும் அடைந்துவிடவேண்டும் என்றெண்ணியவனைப்போல ஆகிவிட்டனர் காங்கிரஸ் தலைவர்களும் மந்திரிமார்களும்.

மக்களுக்காகப் பணியாற்றக் கிளர்ம்பும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் நிலைநீரில்மிதக்கும்தெப்பமாக இருக்கவேண்டும். பல்லாயிரக்கணக்கான மக்களைத் தன் பாதையில அழைத்துச் செல்லும் பணி—வெட்டுக் காயை நகர்த்துவதோ, சுடு சொல்லால் சுட்டெரித்துவிடுவதோ அல்ல, தன்னைச் சுற்றி நான்கு பேரை வைத்துக்கொண்டு 'கட்சி என்பது ஒரு பாட்டினம். அதிலிருக்கும் பொம்மைகளே மக்கள். அவைகளைச் சுற்றிவிடுவதே நம்மைச் சேர்ந்தோர் வேலை' என்று கருதுவதல்ல. இந்தக் காட்டுப்போக்கு, எத்தகைய அரசியல் கட்சியையும் இடு காட்டுக்கு இட்டுச் செல்லுமே ஒழிய, நிரந்தரமானதாக்கிவிடாது.

இக்காட்சிதான்—இன்று காங்கிரசில் நாம் காணுவது. தொண்டர்கள். பிரச்சாரகர்கள் ஒரு அரசியல் கட்சியின் உயிர்நாடி. அவர்கள் கட்சியில் சேர்ந்துழைக்க முன்வரும் கருத்தெல்லாம் பொதுப்பணி புனிதமானது—மக்களுக்கு சேவை செய்வது மகத்தான காரியம், மனிதாபிமானத்தின் உச்சக்கட்டம் என்பதால்தான்.

இந்த எண்ணத்துடனேயே, வாழ்க்கைப் போரில் தன் குடும்பம் திக்கித் திகைத்து நின்றாலும், தேசம் சீர்பட்டால் வீடும் சீர்படும் என்ற பரந்த உள்ளத்துடன்—பறந்து திரியும் பறவையைப்போல் அவர்கள் வந்து குவிகிறார்கள். குவியும் கூட்டத்தை, தன் விளையாட்டுக் கருவிகளாக, அரசியல் கட்சியை ஏற்றுச் செலுத்தும் தலைவர்கள் கருதத் துவங்கி காரியமாற்றத் தலைப்படுவதன் விளைவாகவே விபரீதங்கள், ஏற்படுகின்றன.

தொண்டர்களை வெளியூர் கிளை ஸ்தாபனங்களை, அதன் பிரதிநிதிகளை தன் ஆட்டக்காயாக உபயோகப் படுத்தும் ஆசை அத்தலைவர்களுக் கேற்படுகிறதென்றால் அதற்குள்ள ஒரே காரணம்—சுயநலம்தான்!

இந்தச் சுயநலம், தான் என்றும் இருந்த இடத்தில் இருக்கவேண்டும், தலைவனாகவே திகழ வேண்டும், தன் கைக் கீழ் பலர் நடமாடவேண்டும் என்ற ஆசையின் காரணமாக உதிப்பது.

இந்த 'அல்ப' ஆசை — பொது ஜனத் தலைவருக்கு தோன்றுதல் தகாது, கூடாது! ஆனால், சுயநலத்தைப் பெரிதாகக் கருதுகின்ற காரணத்தால். இந்த ஆசைக்கு அடிமையாகி, கட்சிக்குள் புகுந்தபோது எந்த எண்ணமும் ஆசையும் அவர்கள் இதயங்களிலே இருந்ததோ அதை இழந்து வருகின்றனர்.

பொது சேவை என்ற புனிதப் பாதையைவிட்டு சுயநலச் சேவை என்ற வழி தவறிய கிணற்றுக்குள் விழுந்துவிடுகின்றனர். பொது இலட்சியம் மறைகிறது, கட்சி கட்டுப்பாடு குலைகிறது!

தலைவர் தங்களால காரியத்தைச் சாதிக்கிறார், தங்களாலேதான் அவரது தலைமைப் பதவி நீடிக்கிறது, அவர் தலைவராயிருப்பதால் 'எதையோ' பெறுகிறார் — எனவே தான் நம்மைஅவர் அடிக்கப் அண்டுகிறார் என்று சூட்சமத்தைத் தொண்டர்களும், கிளை ஸ்தாபனத் தலைவர்களும் நிர்வாகிகளும் புரிந்து கொண்டதும், தலைவரையேத் தாங்களும் பின்பற்றத் துவங்கிவிடுகின்றனர்! தலைவர்—மந்திரிகளை மாற்றவும், அடக்கவும், மிரட்டவும் தனது 'தலைமைஸ்தானம்' என்ற பெயரைப் பிரயோஜனப் படுத்தினால், ஜில்லாத் தலைவர் கலெக்டரையும் ஏனையோரையும் மிரட்டவும் அகட்டவும் நினைக்கிறார், எம். எல். ஏ. இஷ்டப்பட்டோருக்கு 'பெர்மிட்' கொடு என்று கேட்கத் துவங்குகிறார்! 'நான் கேட்டேன் அந்த அணைக்கட்டு 'காண்டிராக்டை' அவர் 'இன்னொருவருக்கு தந்து விட்டார். அவர் கொடுத்திருக்கும் அந்த ஆள் காங்கிரஸ் காரரல்ல...முன்பு ஜஸ்டிஸ் கட்சியிலிருந்தவர், ஒரு ஜரிகைக் குல்லாய்!' என்று தாலுகா காங்கிரஸ் தலைவராகவும் கட்சி முக்கியஸ்தராகவும் இருப்பவர் ஒரு மந்திரிமீது குற்றஞ் சாட்டி தலைவருக்கு மகஜர் அனுப்புகிறார். தலைவரோ, இவருடைய தயவை விரும்புபவர்—தனது நலத்துக்காக! எனவே, தனது கண்களை மந்திரிமார் மீது செலுத்த நேரிடுகிறது! தவறும், தகாத செயலும் தாண்டவம் புரியத் துவங்கி விடுகின்றன!

தலைவர் — தனது நலத்துக்காக பிறரை வசப்படுத்திக் கொள்ள நினைக்கிறார்! 'ஆப்தர்ந்தவர்'களாக ஆக்கிக் கொள்ளவேண்டுமென, அவர்கள் விருப்பப்படியெல்லாம் வளைந்து கொடுக்கிறார்! வாய்ச்சொல்—தலைமை வலையச் செய்யும் என்ற எண்ணம் கட்சிப் பிரமுகர்களிடையே தெரிந்து விட்ட காரணத்தால், தலைவர் தங்களை 'வலையில் சிக்கியமீன்'களாகக் கருதுகிறார் என்று புரிந்து கொண்டதும் 'சலுகை'களை விரும்புகின்றனர்—உதவிக்கு கூலி, ஒத்தாசைக்கு சலுகை, உதயமாகத் துவங்குகிறது!

இந்நிலை வளர்ந்தால், மக்கள் சேவை மனதை விட்டு அகலுமே யொழிய துளிர்க்க முடியாது—சுயநலம் கொழுந்து விட்டெரியும்! பின்னர், உழைப்பு ஒரு மளிகைக் கடை பண்டம்! தியாகம் ஒரு கூலிச் சரக்கு! தேசசேவை ஒரு புது வித வியாபாரம்!

பொது நலப்பாதை மாறி சுயநலக் 'கோட்டத்துக்குள் 'சொந்த முகாம்' ஏற்பட்டு விடும்.

இந்த 'சொந்த முகாம்' படலம் தான், இன்றைய காங்கிரஸ் ஸ்தாபனத்தில் ஆலமரம் என வளர்ந்து நிற்கிறது—விஷவிருட்சம் விருத்தியடைந்து படர்ந்து நிற்கிறது!

X X X

கோபாக்கெட்டி

காட்பாடி சுதர்சன் ஆயில்மில் 10-லட்சம்

அதோனி ராயலசீமா மில் 10 ,,

பம்மிடி இராதாகிருஷ்ணஆயில் 1¼

தெனாலி மோகன்தொழிற்சாலை 1 ,,

இதாலி பஸ்கள் வாங்கிய வகையில் பணவிரயம்.

பக்தவச்சலம்

ராமநாத கோயங்காவுக்கு இரும்பு பெர்மிட்.

எம். எல். ஏக்களுக்கு இரும்பு.

சீதாராமரெட்டி (தொழில்மந்திரி) மாமனாருக்கு சிமெண்ட் பர்மிட்.

சீதாராமரெட்டி

ஓ. வி. அளகேசன் (பக்தவத்சலம் ஷட்டகர்) பஸ் பாதைகள்

எம். சோமப்பாவுக்கு பஸ் பாதைகள் ராம்நாத்கோயங்கா 'பஸாட்டோ ஓட்டலை'வாடகை கட்டுபாடு இலாமல் செய்தது.

மாதவமேனன்

செட்டிபல்லி அப்பப்பாவுக்கு ரூபா 40,000 பெறுமான புண்ணாக்குஉரத்தை விவசாய இலாகாவில வாங்கி விற்க ஏற்பாடு செய்தார்.

காங்கிரஸ் ஆட்சியின் புகார் காண்டம் இது — முன்னாள் பிரதமரான பிரகாசம் சாட்டியிருப்பது!

வரிசை வரிசையாக புகார்கள் — முக்கியமந்திரிகள்மீது! காங்கிரஸ்—ராமராஜ்ய—மந்திரிகள்மீது!

வேதனையுடன் இந்த விஷயம் பற்றி விபரமுடன் தகவல் தந்திருக்கும் 'தமிழ்மணி' முதல் எல்லா தேசிய இதழ்களும், ஒரு ஒப்பாரி வைத்திருக்கின்றன, இந்தக்குற்றச் சாட்டுகள் குறித்து!

தனது சொந்தக் காரர்களுக்குப் பணம்கொடுத்தார்—புது ஆலைகளைக் கட்டி முடிக்கும்படி!

வேண்டியவர்களுக்கும், உறவினருக்கும் இரும்பு 'பெர்மிட்'டும் பஸ் ரூட்'டும் வாங்கித்தரப்பட்டது!

விவசாய இலாகா புண்ணாக்கை எடுத்துவிற்கச் சொன்னார்!

வித விதமான குற்றச்சாட்டுகள்—பட்டியலைப்பார்த்தாலே நீளுகிறது, மக்களின் வரிப்பணம் மந்திரிமார்களால்– விரயமாக்கப்பட்டிருக்கிறது; வேண்டியவர் சுகபோகத்துக்குப் உறவினர்கள் உல்லாசத்துக்கும் ஊரார் பணம்!

ஆட்சிப்பீடம் அமர்ந்தோரிடையில் சுயநலம் — சுகபாதை கண்டு சுருட்டிமடக்கும் அரசியல்நீதி!

நினைத்தாலே நெஞ்சங் குமுறுகிறது. ஏழைராஜ்யம் என்று இதற்குப்பெயராம்! சுயராஜ்யமாம்—காந்தியார் கண்ட ராமராஜ்யமாம்! மக்கள் பெயர் சொல்லி மன்றமேறிய மந்திரிமார்கள்மீது ஊழல்வழக்கு — அதுவும் அவர்களைச்சார்ந்த பிரகாசம் சுமத்துகிறார்.

கூட்டுக்கொள்ளையில் பங்கு கிடைக்காவிட்டால் கொள்ளைக் கூட்டத்தில் தகராறு வந்து, அது சந்திக்கு வரும் என்று கதைகள் கூறுவார்கள். இந்த "ராமராஜ்யத்தைக்" காணும்போது அதுதான் நினைவுக்கு வருகிறது!

கூட்டாளி பிரகாசம் குற்றஞ் சுமத்துகிறார் — தனது கட்சியைச் சேர்ந்த மந்திரிமார்கள்மீது! காண முடியாத காட்சி — காலவரத்திலே உருவானது, கண்ணீர் சிந்தித்தந்த வரிப்பணம் விரயமாகும் வேதனையை விளக்குவது! விசித்திரமானது!

X X X

கட்சியில் ஊழல்—சண்டை, 'ஆள்' மாற்றும் அபூர்வச்செயல்கள்!

ஆட்சிப்பீடமேறிய அவர்களது சகாக்களின் ஆட்சியிலும் அடாத செயல்கள்! ஆகாத ஆட்சிநிகழ்ச்சிகள்!

சுதந்திரம், நாமிருக்கும் நாடு நமதே, வீரசுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர் வேறொன்றும் கொள்வாரோ என்று வெள்ளையனை வெளியேற்றுமுன் காங்கிரஸ் கட்சியாளர் எழுப்பிய சுதந்திரகீதம் மறைந்து தந்திர கீதம் இன்று பாடப்படுகிறது.

சுயநலம்—ஆளவந்தாரிடையிலும், கட்சியை நடத்திச் செல்வோரிடையிலும் தாண்டவம்புரிகின்ற காரணத்தால், நாட்டில் நன்மைகள் மலரவில்லை.

காங்கிரஸ் ராஜ்யத்தில்மக்கள்எதிர்பார்த்தது ஏராளம்—எதுவும் பூர்த்தியாகவில்லை. பதிலாக வேதனை விரிந்திருக்கிறது. விளைவாக மக்கள் மன்றத்திலே 'காங்கிரஸ்' என்ற சொல் அருவருப்பையும் ஆத்திரத்தையும் இன்று சிருஷ்டித்திருக்கிறது.

ஆட்சியிலிருப்பவர்கள் கூறியபடி நன்மை செய்யவில்லை—ஏன் என்று கேட்கிறீர்கள்! அவர்கள் என்ன செய்யமுடியும்? இன்னின்ன சங்கடங்களை அவர்கள் சமாளிக்கவேண்டியிருக்கிறது—என்று ஆளவந்தார் மீது மக்கள் அதிருப்தி கொள்கிறார்கள் என்று தெரிந்ததும் காங்கிரஸ் தலைவர்கள், பிரச்சாரகர்கள் தேர்தலின் போது வலம்வருவதைப்போல' திக் விஜயம் புறப்பட்டிருக்கலாம். ஆனால் செய்யவில்லை — அதிருப்தி வளர்வதையறிந்தும் அதைச் செய்யவில்லை!

ஆகஸ்டுத் தியாகத்துக்கு எத்தனை ஏக்கர், எந்தஇடத்தில், ஏனின்னம் வரவில்லை—என்பன போன்ற சுயநல காரியங்கள், சொந்த விஷயங்கள், அவர்களைக் கட்சியின் வளர்ச்சியை மறக்கச் செய்துவிட்டது.

விளைவு—இன்று கட்சிகரைகிறது! கோட்டை சரிகிறது! கல்லறையில் காங்கிரஸ்!—எவரும் எதிபார்க்காதது நடக்கிறது, மக்களால் போற்றிப் புகழப்பட்ட கட்சி இன்று உதாசீனம் செய்யப்படுகிறது!

* • •

தொண்டர்கள், நிர்வாகிகள், தலைவர் என்ற கூட்டு அமைப்பில் கட்சியை நடத்திச் செல்வோரிடம் கண்ணியமும், தவறு கண்ட இடத்து தண்டிக்கும் துணிவும் இருந்திருந்தால் இந்த நிலை வளர்ந்திருக்காது. தலைவர், தான் தலைவராகயிருக்க தொண்டர்களை கைக்குள் போடவும், தொண்டர்கள் தலைவரை மிரட்டவும், பொதுநலம் மறைந்து சுயநலம் கூத்தாடக் கிளம்பியதன் கோரக் காட்சிகள்தான்—ஊழல் பட்டியல்!

கல்லறையில் நிற்கும் காங்கிரசின் இந்த நிலைக்கு நல்ல உதாரணம் தமிழ்நாடு காங்கிரசே போதும்!

* • *

கல்லறையில் நிற்கும் காங்கிரஸ் கட்சியில் சதுரங்கவிளையாட்டு நடத்தும் பிரமுகர்கள், வெட்டுக் காய் நகர்த்தும் தலைவர்களைத்தவிர—சுயநலம் கருதா தொண்டர்கள் இல்லையா, எவருமே இல்லையென்று கூற முடியுமா! என்று கேட்கலாம். உண்மையில் ஊருக்குப் பயன்பட வேண்டும் என்ற நல்லெண்ணமும், காங்கிரஸ்மீது அன்று கொண்ட 'பக்தி' அசையாத மனப்பான்மையும் கொண்ட தொண்டர்கள் — சேவகமணிகள்—வாலிபவீரர்கள் இருக்கிறார்கள். இல்லையென்று கூறவில்லை!

வெட்டுக்கும் குத்துக்கும் நெஞ்சைக் காட்டி நேர்மைக்காகப் போராடும் நினைவு கொண்டோர் இருக்கிறார்கள்.

ஆனால், அவர்கள் ஆசை, பணி, விழலுக்கிறைத்த நீராகுமே யன்றி கட்சிப் பயிரைக்காப்பாற்றிவிடாது.

"கண்டவராயண்டட்'டி, காங்கி

ரஸ் கமிட்டி 'சர்க்காரின் விதிப்படி', லஞ்சம், பிளாக் மார்க்கெட் முதலியவைகளை ஒழிக்கத் தொண்டாற்றியதில் கமிட்டி மீது ஒருசில சுயநலக் கோஷ்டிகளால் ஏற்பட்ட பொறாமை, வீண்மனஸ்தாப வளர்ச்சியாலும் அக்கோஷ்டியினருடன் கமிட்டியின் உபதலைவர் உறவுகொண்டு கமிட்டி நிர்வாக அங்கத்தினர்களுள் பிளவு ஏற்பட ஆயத்தம் செய்ததாலும் காங்கிரஸ் கமிட்டி கலைக்கப் பெற்றது"

கண்டவராயன்பட்டி காங்கிரஸ் தலைவர் நமக்கு அனுப்பிவைத்திருக்கும் செய்தி இது. ஒரு நெல் ஆலை, லைசென்ஸ் இல்லாமல் ஓடிக்கொண்டிருந்ததாம்! அதைச் சர்க்காருக்கு அறிவித்து நடவடிக்கை எடுக்கச் செய்ததன் விளைவாக, தகராறும் வம்பும் வளர்ந்து, கடைசியில் அவ்வூர் காங்கிரஸ் கலைக்கப்பெற்றுவிட்டது. நெஞ்சிலுறுதி கொண்டோருக்கு காங்கிரசில் ஏற்படும் 'கதி' குறித்த சிறு உதாரணம் இச் சம்பவம்!

இதுபோல பலப் பல! நித்திய நிகழ்ச்சிகளாக நடந்து கொண்டிருக்கின்றன

காங்கிரஸ் கோட்டை, கட்சியின் ஊழல்களால் சரிந்துகொண்டிருக்கிறது, சாவுக் குழியில் விழுந்து கொண்டிருக்கிறது. எதிர்க் கட்சிகளின் வளர்ச்சியினால், காங்கிரசின் காலம் வேகமாக விரைந்துகொண்டிருக்கிறது.

மக்கள் மன்றத்தில் கூறு வளி! இதையடக்க, 'விபூதி' விளம்பரங்கள், 'திட்டுவிழா'க்கள் பயன் தந்துவிடாது. உண்மையில் காங்கிரஸ் கட்சியின் போக்குக்காக கண்ணீர் சிந்தும் வாலிபர்கள் பலர் இருக்கலாம். அவர்கள் கண்ணீர் — கட்சியைக் காப்பாற்றிவிட முடியாது.

வேதனை, விளைவுகளை நிறுத்திவிடாது!

இந்நிலையை காங்கிரஸ் வாலிப நண்பர்கள் கருத்தூன்றிக் கவனிக்க வேண்டும். பிரேதத்தைப் பிழைக்க வைப்பதும், ஒடிந்த காலுடையானை ஓட்டப் பந்தயத்தில் விரட்டுவதும்— பயன்தர முடியாத செயல்கள்!

கோட்டை சரிகிறது! குமுறிப் பயனில்லை—குந்தி அழுதாலும் பலனேற்படாது! ✱

வெட்கக் கேடு

★

இந்தியக் குடியரசுத் தலைவர், தனது ஆட்சியின் கொள்கைகள் குறித்து, பதவியேற்றதும் ஆற்றிய சொற்பொழிவின்போது குறிப்பிட்டார், தனது சர்க்கார் பாதுகாப்புச் செலவைக் குறைத்துக்கொள்ளும் என்பதாக!

பாதுகாப்புக்கென சர்க்கார் செலவழிக்கும் தொகை இனி குறைக்கப்படலாம் என்று எண்ணினோம்.

அண்மையில் இந்திய சர்க்காரின் வரவு செலவு திட்டம், இந்திய சட்டசபையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது அதைக் காணும்போது, குடியரசுத் தலைவரின் கூற்றுகண்டு நாம் கொண்ட எண்ணம் நம்மை ஏமாற்றிவிட்டது என்பது நன்கு விளங்குகிறது.

மொத்தம் இந்திய சர்க்காருக்கு வரும் வருமானம் 347.5 கோடி ரூபாய்களாகும். ஏழை இந்தியாவின் இந்த வருமானத் தொகையில் பாதுகாப்புக்கென ஒதுக்கித் தரும் தொகை 168 கோடி ரூபாய், கிட்டதட்ட வருமானத்தில் பாதியளவு!

எனினும், நிதிமந்திரி ஜான் மத்தாய் சந்தோஷத்துடன் குறிப்பிட்டிருக்கிறார், கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு பாதுகாப்புக்கென செலவழிக்கும் தொகையைக் குறைத்திருக்கிறோம் என்று!

குறைத்திருக்கிறாராம். எவ்வளவு தெரியுமா? இரண்டு—ஆமாம், சாதாரண இரண்டே இரண்டு கோடி ரூபாய்! கடந்த ஆண்டு 170 கோடி; இந்த ஆண்டு 168 கோடி!

மக்கள் நன்மைக்கான திட்டங்களுக்குப் பணமில்லை, பண்டாரப் பாட்டுபாடும் "ஏழைகள் சர்க்கார்" இத்தனை கோடி ரூபாய்களை, பாதுகாப்பு, என்கிற படாடோபத்துக்காகச் செலவழிக்கிறது!

பாதுகாப்பு—ஒருநாட்டுக்கு அவசியம்தான்; இராணுவம் இல்லாத சர்க்கார், சேனை இல்லாத சிம்மாசனம் இருக்கமுடியாததுதான். ஆனால் வரும் வருமானத்தில் சரிபாதிக்குமேற்பட்ட தொகையை ராணுவத்துக்கும் பாதுகாப்புக்கும் என செலவழித்தால் இதை என்னவென்று கூறுவது! நாட்டைச் சூழ்ந்து எதிரிகள் எவரும் வட்டமிட்டுக்கொண்டுமில்லையே!

இரண்டு கோடி ரூபாய்—கடந்த ஆண்டைவிடக் குறைக்கப்பட்டிருக்கிறது என்று பெருமிதமாகப் பேசியிருக்கிறார். சரி! இரண்டுகோடிதான் குறைத்திருக்கிறார்களே, இத்தொகை நாட்டுமக்களின் விவசாய நலன், சுகாதார வசதி, சுகத்துக்கான வழிகளில்தான் செலவழிக்கப்படலாம் என்று எண்ணத் தோன்றும்.

சாண் ஏறினால் முழம் சறுக்கும் என்று சொல்வார்கள்! அது, காங்கிரஸ் ஆட்சியின் சரித்திரத்தில் மிக மிக உண்மை.

இந்தியா சுதந்திரமடைந்ததற்குப் பின் ஆடம்பரம், அந்தஸ்து என்று கூறிக்கொண்டு அதிகமான பணம் வெளிநாட்டிலாகாவால் செலவழிக்கப்பட்டிருக்கிறது. வெளிநாடுகளுக்கெல்லாம் அரசியல் தூதர்கள், அவர்கட்கெல்லாம் இஷ்டப்படி சம்பளம், சுகபோகமான வசதிகள் செய்து தரப்பட்டிருக்கின்றன!

விசயலட்சுமி பண்டிதரின் தூதுவக் காரியாலயத்துக்கு லட்சக் கணக்கான ரூபாய்களில், மேஜை நாற்காலிகள் ஸ்விட்சர்லாந்திலிருந்து தருவிக்கப்பட்டது — பிரிட்டனிலிருக்கும் இந்திய ஹைகமிஷனர் வி. கே. மேனனுக்கு பத்துக்கு மேற்பட்ட புதுவிதக் கார்கள் வாங்கித் தரப்பட்டது—இது போன்று பலப்பல வீண் விரயச் செலவுகள் பற்றி புகார்கள் எழும்பின. பலரால் கண்டனக் குரல்கள் எழுப்பப்பட்டன!

அத்தனையும் காட்டுக் கூச்சலாயிற்றே தவிர ஆளவந்தார் கருத்தைத் தொட்டதாகத் தெரியவில்லை!

கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டில் வெளிநாட்டிலாகாவுக்கென செலவழிக்க ஒதுக்கியிருக்கும் தொகை இரண்டேகால் கோடி ரூபாய் அதிகம்! முன்பு 1.14 கோடியென்றால், இப்போது 3.39!

எந்தெந்த விஷயங்கள், வீண் செலவுக்கானவை யென்று கூறப்பட்டதோ, கண்டிக்கப்பட்டதோ அதற்கு இன்னும் அதிகத்தொகை செலவழிக்க முடிவு!

கல்வியும் ஏழ்மையும்—தலை விரித்தாடுகின்றன. அவைகளுக்கு என்றுகூட இந்த இரண்டு கோடியும் ஒதுக்கப்படவில்லை! வெளி நாட்டிலாகாவுக்கென விரயமாக்கப்படுகிறது! வீண் பெருமை — விஸ்தரிக்கப்படுகிறது! இந்த வெட்கக் கேட்டை என்னவென்று சொல்வது! ✱

திராவிட நாடு
ஞாயிறு] 12—3—50 [காஞ்சி

பார்த்து ஓட்டப்பா வண்டியை!

★

பார்த்து ஓட்டப்பா வண்டியை! எச்சரிக்கை செய்கிறார் எஜமான்—உள்ளே உட்கார்ந்திருப்பவர். வண்டி மீண்டும் மேட்டிலும் குழியிலும் செல்கிறது.

"கண்மண் கூடவா தெரியலே! கவனிச்சு ஓட்டுடான்னு, கல்லைப் பார்த்தே போறியே..."

எரிச்சல் அதிகமாகிறது. இரைகிறார், நல்ல பாதையில் வண்டியை ஓட்டு என்று சொல்கிறார். பின்னரும் வண்டி எழுந்து விழுந்து ஆடுகிறது!

"ஏய்! உன்னை எதுக்கடா அமர்த்தினேன். இப்படி வண்டியோட்டவா?...நீ ஓட்றது கட்டை வண்டி இல்லே, வில் வண்டி! 'காசு' செலவழிச்சுக் கட்டினது. தெரியுதா?"

கோபம் அதிகமாகிறது. கூச்சலிடுகிறார். 'இப்படித்தான் வண்டியோட்டுவதோ—குருட்டுப் பயலே' என்று சீறுகிறார். திரும்பிச் சொல்கிறான் வண்டிக்காரன்,

"நான் என்னங்க செய்யறது, ரோடு அப்படி! வேணும்னே ஓட்டுறேன், மேட்டிலும் பள்ளத்திலும்? பாழாப்போன ரோடு! நீங்களே பாருங்களேன்"

பதில், பதட்டமடையச் செய்கிறது எஜமானை.

"கந்தன் ஒரு கபோதிப் பயலுங்க...கண்ணும் தெரியாது, ஒரு மண்ணும் தெரியாது! கப்பி வண்டியோட்டிக் கிடந்த பயலை, வில் வண்டி ஓட்டச் சொல்றீங்களே! வேணும்னு கூட வண்டியை பள்ளமா பார்த்து ஓட்டுவான்க...திமிர்ப் பிடிச்ச பய! எஜமான், என்னை ஒரு நாளைக்கு வண்டியை ஓட்டச் சொல்லிப் பாருங்களேன்...! இவுரு ஏறி, கயிற்றைப் பிடிச்சா, காளை மாடு பறக்குங்க..."

இப்படியெல்லாம் சொல்லிக்கொண்டு வேலைக்கு வந்தவன்தான் இவன். பழைய ஆள் பிடிக்கவில்லை, பாதை தவறி எங்கேயோ ஓட்டுகிறான் என்று கூறி அவனை நிறுத்திவிட்டு இவனை அமர்த்தினவர்—எஜமான்!

இப்போதும் வண்டி, மேட்டிலும் பள்ளத்திலுமே செல்கிறது, பாதை நழுவிப் போகிறது! கேட்டால் 'ரோடு அப்படி' என்று பதில் சொல்கிறான்—"நான் ஓட்ட ஆரம்பிச்சா காற்றாப் பறக்காது மாடு! மேடு பள்ளமெல்லாம் தெரியாமே ஓட்டுகிறேனு, இல்லையான்னு நீங்களே பாருங்களேன்" என்று சொல்லிக்கொண்டு வந்தவன்!

அப்போது வாய் வீரம்—இப்போது 'ரோடு அப்படி' என்று பதில்! எப்படியிருக்கும், எஜமானருக்கு?

* * *

"மக்களின் நிலைமைக்குத் தக்கவாறுதான் சர்க்கார் அமையும். நாட்டு பிரஜைகளின் வாழ்க்கை முறையில் அபிவிருத்தியும் ஒழுங்கும் பண்பாடும் வளர வளர சர்க்காரின் தன்மையும் உயரும்.

உபதேசம் புரிந்திருக்கிறார், சர்க்கார் நல்லதாகயிருக்க வேண்டுமானால் மக்கள் நல்லவர்களாகயிருக்க வேண்டுமாம்! 'அட்சர லட்சம்' கொண்ட இந்த அருஞ்சொல்லை உபதேசித்தவர்—வேறுயாருமல்ல, 'மாஜி' கவர்னர் ஜெனரல் ராசகோபாலாச்சாரி அவர்கள்தான்! 'பள்ளி ஆசிரியர்கள டங்கிய கூட்டமொன்றில் மார்ச் 9ந் தேதியன்று சென்னையில் பேசிய போது இந்த'சிந்தனைச்செல்வத்தை' சிந்தியிருக்கின்றார்.

சர்க்கார் யோக்கியமாயிருக்க வேண்டுமா?—

என்று கேள்வியைக் கேட்டுவிட்டு,

மக்கள் யோக்கியமாயிருந்தால் இது முடியும்!

என்று 'உபதேசம்' புரிந்துள்ளார்.

பிரஜைகளிடம் ஒழுக்கம் வளர்ந்தால் சர்க்காரிடம் ஒழுக்கம் வளருமாம்—திண்ணை மடத்து 'திகம்பர சாமி'யாரல்ல சொன்னவர், ஒரு தேசத்தின் தலைவராகயிருந்தவர்! எனினும் இந்த'இதோபதேசம்'செய்கிறார்!!

"ஏம்மா—இதற்குப் போா நாட்டியம்! நன்றாகக் குதித்தேன் என்று வேண்டுமானால் சொல்—ஒத்துக் கொள்கிறேன். நாட்டியமாடினேனை என்று சொல்கிறாயே—இடங்கிடைத்தது என்று இஷ்டம்போல குதித்து கும்மியடித்துவிட்டு!" என்று கூறினாராம் ஒரு நாட்டிய ரசிகர், நடனமாதைப் பார்த்து!

"நானென்னசெய்யட்டும். நல்லாத்தான் ஆடினேன்—ஆனா, இந்தப் பாழாப்போன முற்றம் ரொம்ப கோணலுங்க!!" என்று பதில் சொன்னாளாம் அவள்!

ஆடத் தெரியாதவளுக்கு முற்றம் கோணல்!

ஆச்சாரியாருக்கு — மக்கள் எப்படியோ, அப்படி ஆட்சி!

நல்லோரும் பொல்லாரும் வாழும் இடம், நாடு. சிரித்துப்பேசி வாழ்பவன், உழைத்து உலர்ந்து அழுபவன், சுரண்டித் தின்று கொழுப்பவன்— திருடன், வஞ்சகன், கோமாளி—இத்தனை பேரும் நிரம்பியது நாடு.

கண்ணிலே நீர், கையிலேகலப்பை இதயத்திலே கவலை, வயற்றிலே பசி —நடந்து செல்கிறான் விவசாயி.

அழகான கார், ஆடாத 'மாடல்' —விருந்துக்குச் சென்றுவிட்டு விரைகிறார் கனவான்.

ஊர் சுற்றுவது தவிர ஒன்றும் தெரியாது சீமானிடம் வருகிறான், சிரிக்கிறான், பேசுகிறான், செல்கிறான் கையில் பணத்தோடு.

விசித்திரங்கள் நிரம்பிய பூமி, இது. புலியும் ஆடும், பூனையும் எலியும், சிறுத்தையும் சிங்கமும் உலவிடும்கூண்டு!

உழைப்பவன்—உண்டு கொழுப்பவன்—உல்லாசி என்று பேதமும் பிளவும் நிறைந்து கிடக்கும் சமுதாயத்தை நல்வழியில் இட்டுச் செல்வதே ஆட்சி என்பதன் பொருள்.

உழைக்காது வாழ்பவனை வளரவிட்டு, உழைத்து உருக்குலைந்தவனை தளரச் செய்வது — ஆட்சியல்ல வாழப் பிறந்தோரை வாழச் செய்யும் வகையில் வழியமைத்துத் தருவதுதான் நல்லாட்சி யென்பதற்குள்ள பொருள்.

சிதறிக் கிடக்கும் மக்களைத் திரட்டி, அவர்களைச் சிந்தனைப்

பொக்கிஷம் ஆக்குவதுதான் அரசாங்கத்தின் கடமை.

அரசாங்கம் — என்பதன் அர்த்தமே நாட்டை நல்பாதையில் நடத்திச் சென்று அங்கு வாழும் மக்களுக்கு மகிழ்ச்சியூட்டுவதுதான்.

மக்களை மகிழ்ச்சிப் பாதையில் வைக்கும் பொறுப்பு அவர்களை ஆளவந்தவர்களுடையது.

ஆனல், ஆச்சாரியார் கூறுகிறார், மக்கள் எப்படியோ அப்படித்தான் சர்க்கார் இருக்குமாம்!

ரோடு எப்படியோ அப்படித்தான் வண்டி போகும என்று சொன்னன் —வண்டியை ஓட்டிச் செல்வதற்காக நியமிக்கப்பட்டவன்.

ஆட்சிப் பீடமேறிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஆச்சாரியார் சொல்கிறார் — மக்கள் எப்படியோ அப்படித்தான் அரசாங்கம் இருக்கும் என்று!

குறைகள் நிரம்பிக் கிடக்கின்றனவே!—குமுறல், மக்களிடையிலே! கொந்தளிப்பு, அதிருப்தி மக்கள் மன்றத்தில்!—இது ஏன்? இருக்கலாமா, உங்கள் ஆட்சியில்? என்று யாராவதுகேட்டால் அதற்கு இதோ பதில், என்று 'உபதேசம்' செய்துள்ளாரோ, என்னவோ, இந்த அறிவுரையை!

இன்று மக்கள் மன்றத்தில், வாழ்க்கை ஒரு சோதனைச்சாலை! ஏழை பணக்காரன் பேதமும், சாதி மதச் சண்டையும் நிறைந்து, நாடு, காடாகயிருக்கிறது; நந்தவனமாகயில்லை!

வேதனையும் சோதனையும் நிறைந்து கிடக்கும் மக்கள் வாழ்வை நிமிர்த்தி எல்லோரும் ஓர் நிலை ஆக்குவதுதான் சர்க்காரின் கடமை என்று கூறவில்லை அவர். அதற்குப் பதில், மக்கள் எப்படியோ அப்படிதான் சர்க்காரும் இருந்துவரும் என்று 'உபதேசம்' புரிந்துள்ளார்!

* • *

இந்த உபதேசத்துக்கு முதல் நாள் புது டெல்லியில் மத்திய சர்க்கார் மராமத்து மந்திரி 'உபதேசம்' செய்திருக்கிறர் முதலாளிமார்களுக்கு.

"சிலர் கையில் மட்டும் செல்வம் முடங்கக் கூடாது.

முதலாளிகளின் மனேபாவம் மாறவேண்டும். லாபஞ் சேர்க்கும் சுயநலப் பாதையை விட்டுவிட்டு பொது நலனுக்கு உழைக்கவேண்டும். தொழிலாளர்களும் மனிதர்களே என்ற மனே பாவம் வர வேண்டும்!"

உருக்கமான உபதேசம், சமஸ்கிருதஸ்லோகங்களை மேற்கோள் காட்டி விளக்கினராம் இன்ஜினீயரிங் சங்க ஆண்டு விழாவில பேசிய போது.

புலியே-உனக்கொரு பொன்னுரை சொலவேன். கேள்! பொல்லாங்கு செய்யாதே, வேட்டையாடாதே விலங்குகளை வதைக்காதே!

தூண்டில் போடும் தோழனே, வா இங்கே! மீனைப்பிடி — ஆனல் பிடித்ததும், கூடைக்குள் போட்டுக் கொண்டு செல்லாதே! பிடித்தமீனை மீண்டும் நீருக்குள் விட்டுவிடு — அது நீந்தி விளையாடும் — அப்போது அதன் அழகைப்பார்!

இப்படிப் புலியிடமும் தூண்டில் போடுபவனிடமும் 'உபதேசம்' புரிந்தால்—கேலியாக முடியுமேயொழிய, பலன் கிடைக்காது.

> குடியரசு சர்க்காரின் பட்ஜட் முதலாளிகளுக்கு ரொம்ப சகாயமாக அமைந்திருக்கிறது. பொது மக்களின் நலனைவிட முதலாளிகளின் நலனை உத்தேசித்தே இந்த பட்ஜட்டைத் தயாரித்திருக்கிறர்கள்.
>
> காண்டிபம்,
>
> 10—3—50.

எனினும், மராமத்து மந்திரி காட்கில், உபதேசம்புரிந்திருக்கிறர் முதலாளிமார்களுக்கு! வேண்டாம் வீணசை. மனேபாவத்தை மாற்றிக் கொள்ளுங்கள். தொழிலாளர்களும் மனிதர்கள்தான். மிஷின்கள் அல்ல. இதை உணருங்கள், என்று! மந்திரியார்—மகரிஷியல்ல, முற்றுந் துறந்த முனிபுங்கவரல்ல! எனினும் 'ஸ்லோகங்களை'ச் சொல்லி இதோபதேசம் புரிந்திருக்கிறர், ஏழைகள் சார்பில், முதலாளிகளுக்கு!

யாவரையும் சமமாக நினை.

நடமாடும் தெய்வங்களே தெய்வங்கள்!

அவர்கள் சேவையே கடவுள் பக்தி.

காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே!

ஊசியின் துவாரத்தில் ஒட்டகம் கூட நுழைந்துவிடும், ஆனல்பணக்காரன் சுவர்க்கவாயிலை எட்டவும் முடியாது.

இத்தனை இதோபதேசங்கள்—இதுவரையில் பலரால் மக்களுக்குச் செய்யப்பட்டிருக்கின்றன. பொன்னசை பொல்லாது என்று போதனை புரிந்து சென்றோர் பலர்—பட்டினத்தார், தாயுமானவர், ராமலிங்கம், இயேசு, இன்னும் எத்தனையோ ரிஷீசுவரர்கள், ஜடாமுடிதாரிகள் 'மாயப்பிரபஞ்சத்தின் அநித்திய வாழ்வைப்பற்றி' கூறிப் போயிருக்கிறர்கள்.

பொன்னசை—நரகத்தில் தள்ளிவிடும் எனறெலலாம் உபதேசம் செய்திருக்கிறர்கள் எனினும், அந்த ஆசை மறைந்துவிடவில்லை; இருக்கிறது! நபோதனர்களும் முனிசிரேஷ்டர்களும் கூடாது, தகாது என்று கூறிச் சென்றதையே துச்சமென மதித்து, துணிகரமாக பணத்தின் மீது இச்சைகொண்டு கிடக்கின்றனர், இங்குள்ளோர்!

பூஜை, நைவேத்தியம், வேதம், உபநிஷத்—இவைகளைப் போற்றிப் புகழ்ந்து புண்யம் தேடுபவர்களாயிருந்தும், பணம் படைத்தோர் பூலோகக் குபேரர்கள் ஆக ஆசைப்பட்டுக் கிடக்கிறர்களேயன்றி—எவராவது முனிசிரேஷ்டர்களை மதிக்கவோ, வேத ஸ்லோகங்களை உணரவோ இல்லை!

எனினும், இவர்—என். வி. காட்கில்—உபதேசம் புரிகிறர், மனிதாபிமானம் வேண்டாமா, மக்களை மறப்பதா, தொழிலாளர்களும் மனிதர்கள்தான், செல்வத்தைக் குவிக்காதீர் என்று!

உபதேசம் புரியும் மந்திரிமார்கள் 'உபநிஷத்' புரிந்தவர்கள், கற்றவர்கள் என்று கூறமுடியாது! வேதத்தைக் கரைத்துக் குடித்து நிற்கும் கோயில் அர்ச்சகர்களுக்கே, பணம் படைத்தோர் அஞ்சவில்லை.

அமைச்சர்கள், அர்ச்சகர்களில்

லேயே—இந்நிலையில் எப்படி இவர்கள் உபதேசம் அவர்கள் காதில் ஏறப் போகிறது!

ஆசை கொள்ளாதீர் பணத்தின் மீது, என்று பணமூட்டைகளுக்கு 'உபதேசம்' புரிந்திருக்கிறார் மந்திரியார். ஆனால், அவரது சர்க்காரைப் பற்றி பார்லிமெண்டிலிருக்கும் உறுப்பினர்களில் பலர் அளித்திருக்கும் தீர்ப்பைப் பாருங்கள்—புது வரவு செலவுத் திட்டம் பற்றி, மந்திரியார் 'உபதேசம்' புரிந்த அதே தேதியில் —மார்ச் 8-ல் — உறுப்பினர்கள் சர்க்காரின்நிலைபற்றி கூறியிருப்பது:-

துர்காபாய்:— இந்த பட்ஜட் வர்த்தகர்களுக்குத்தான் நல்ல மகசூல் அளிப்பதாக யிருக்கிறதே யொழிய பொதுமக்களுக்கல்ல.

பீகார்லால்:— இது முதலாளி பட்ஜட். காங்கிரஸ் கொள்கைகளுக்கு முரணானது.

ஹூகும்சிங்:— இந்த வருஷத்திலும் மந்திரி முதலாளிகளை தாஜா செய்ய முனைந்துள்ளார்.

தேஷ்முக்:— முதலாளிகளுக்கு சலுகைகள் தரக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்ட பட்ஜட்.

குன்ஸ்ரூ:- அடிப்பீடம் இல்லாத கட்டிடம், அஸ்திவாரம் ரொம்ப குறுகியதாகவும் துர்பலமாகவும் இருக்கிறது.

பர்மார்:- கிராமங்களில் வதியும் ஏழைகளின் நலன்பற்றி எதுவும் இல்லை.

இத்தனை கருத்தலைகள் — இந்திய சர்க்கார் குறித்து!

சர்க்கார், பணக்காரருக்கே பரிவு காட்டுகிறது! ஏழைகளை மதிக்கவில்லை, அவர்களைவிட முதலாளிகளையே மனதில் வைத்து ஏற்பாடுகளைச்செய்கிறது! — பார்லிமெண்டில் உறுப்பினர்கள் இத்தகைய குற்றச்சாட்டுகளை சுமத்துகின்றனர், ஆட்சியாளர்மீது!

ஆனாலும் மந்திரியாரோ,'உபதேசம்' செய்கிறார்—பண ஆசைவேண்டாம், தொழிலார்களை மதியுங்கள், மனிதராக நடத்துங்கள் என்று!

காட்கில் என்றுமட்டுமல்ல அடிக்கடி பிரதமர் பண்டித நேரு, துணைப் பிரதமர் சர்தார் பட்டேல் முதலியோரும், ஏழைகளை எப்படி நடத்துவது என்பது குறித்து முதலாளிகளுக்கு இதோபதேசம் செய்தவண்ணமேயுள்ளனர்!

முதலாளிகளோ—படிக்கும் பாகவதம், பகவத்கீதை, கோயில் அர்ச்சகர் கூறும், 'பணம் என்பது மாயப் பிசாசம்' அதில் பற்றுக்கொண்டு இம் மானிட வாழ்வை வீணாக்காதே' என்ற அறிவுரைகளைக் கேட்டுக் கேட்டுப் பழக்கப்பட்டவர்கள்.

கண்கண்ட தெய்வங்கள் — அர்ச்சகர்கள் என்று கருதுபவர்கள் அவர்கள். எனினும் அவர்களின் உபதேசங்களை, இதுவரை எவரும் பின்பற்றியது இல்லை. இப்போது, அமைச்சர்கள் 'இதோபதேசம்' செய்கின்றனர்! பணக்காரர்களே, பணத்தைப் பெரிதென நினைக்காதீர் என்று அறிவுரை கூறுகின்றனர்!

இவர்கள் உபதேசங்களுக்கு அசைபவர்களா—முதலாளிகள்? ஆண்டவன் தூதுவர்கள் என்று தாங்கள் நம்பும் ஆட்களுக்கே அஞ்சாதவர்களுக்கு அமைச்சர்கள் எந்தமூலை!

இரும்புப்பெட்டிக்கும் இருதயத்துக்கும் வெகுதூரம்—என்று கூறுவதுண்டு. உண்மையில் பணம் படைத்தோருடைய இலட்சியம் எல்லாம் சுயநல சுரண்டலில் இருக்குமே யொழிய, வேறுஎதையும்எண்ணாது.

மக்கள் நலன்—அவர்களுக்கு ஒரு மறந்த நிகழ்ச்சி! தொழிலாளர்கள், அவர்கள் இலாபச் சதுரங்கத்தில் நகர்த்தப்படும் ஆட்டக்காய்கள்தான்.

ஆலைகளில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் உண்டு, முதலாளிகளுக்கு அவர்களில் எவரையும் தெரியாது; தெரிந்து கொள்ளவும் அவர்கள் விரும்புவதில்லை!

என்ன சம்பளம்—எந்தெந்தத் தேதியில் — இவை கூடத் தெரியாத கனவான்கள் உண்டு. காரோட்டும் டிரைவர் பெயர் கூடத் தெரியாதவர்களுண்டு—கார், கணக்கு வழக்கில்லாமல் காத்துக் கிடப்பதால்!

இந்த நிலையில் உல்லாச புரியில் உலவுபவர்களுக்கு உபதேசம் செய்கிறார்கள் மந்திரிமார்கள்!

x x X

ராஜேந்திர பிரசாத்—இந்தியாவின் தலைவர்-அண்மையில் ஒரு உபதேசம் புரிந்திருக்கிறார், வெளிநாட்டிலிருந்து இந்தியாவுக்கு மூலதனம் வருவதன் அவசியம் குறித்து. அதில்,

வெளிநாட்டு மூலதனம் நாட்டு
முன்னேற்றத்துக்கு அவசியம்

என வலியுறுத்திக் கூறியுள்ளார், உபதேசம்செய்துள்ளார். 'ஊரிலுள்ளோரே, எவ்வளவு அவசியம் தெரியுமா, வெளிநாட்டு மூலதனம்? இதையறியாது, என்னென்னவோ பேசுகிறீர்களே!' என்று அறிவுரை கூறுவதுபோல!

அந்நிய மூலதனம் வேண்டுமாம், அது அவசியமாம்—கூறுகிறார், வரவேற்பு வழங்குகிறார், குடியரசுத் தலைவர். முதலாளித்துவம் இலாபத்தையே குறிக்கோளாகக்கொண்டது—அதிலும் அந்நிய முதலாளித்துவம் சுரண்டலையே அடிப்படையாகக் கொண்டது—இது அறியாதவரல்ல மதிப்பிற்குரிய இந்திய ஜனாதிபதி.

எனினும் கூறியிருக்கிறார், அவசியம் என்று. அந்நிய முதலாளிகள்—குறிப்பாக அமெரிக்க நாட்டினர் பிறநாடுகளின் மீது காட்டும் ஆசையும் பரிவும் எந்த அடிப்படையைக் கொண்டது என்பது—யாவரும் அறிந்த விஷயம்.

அதன் பசப்பு வார்த்தைகள் நஞ்சு தோய்ந்த வாள்முனை! ஆசைச் சொற்கள் விஷப்பாம்புகள்! உறவு, உதவி, கடன், வியாபாரம், பின்னர் கொடி — இதுதான் வெளிநாடுகள் குறித்து, அதுகொண்டிருக்கும் திட்டம்.

பிற்போக்கு நாடுகளுக்கு உதவுவதாகச் சொல்லுகின்றனர்—உதவும் அழகு, உலகினர்க்குத்தெரிந்துவருகிறது.

மனிதாபிமானமும், மக்கள் நலனில் அக்கரையும் அவர்களுக்கு எந்த அளவில்இருக்கிறது என்பதை சர். ஏ. ராமசாமி முதலியார்,—ஐக்கிய நாடுகள் சபையில் கூறுகிறார்.

“பிற்போக்கு நாடுகளுக்கு உதவி செய்யப் போவதாகக் கூறும்நாடுகள் உண்மையில் பிற்போக்கடைந்த நாட்டு நலனில் அக்கரையுள்ளவர்களாக யிருக்கவேண்டும்— சுயநல லாபம் அவர்கள் மனதில் எழும்பக் கூடாது. என்ன கிடைக்கும் என எதிர்பார்த்துக்கொண்டு காலங் கடத்துவது கூடாது”

அமெரிக்காவிலிருந்தபடி இந்த அறிவுரையைக் கூறுகிறார்—அவர்!

வெளிநாட்டு மூலதனம் பிற்போக்கடைந்த நாடுகளின் முன்னேற்றத்துக்காக உதவப்படவேண்டுமேயொழிய-சுயநலத்துக்காகக் கூடாது என்று கூறுகிறார்.

எனினும், ராசேந்திரபிரசாத் வரவேற்கிறார், 'உபதேசப்' செய்கிறார், அந்நிய மூலதனம் அவசியமானது என்று!

X X X

முரண்பாடுகள் — முன்னேற்றத்துக்குத் தடை செய்யும் முட்டுக் கட்டைகள்! இவை, இன்றைய ஆளவந்தாரின் வாயிலிருந்து 'உபதேசங்களாக,' வெளிவருகின்றன!

'ஊருக்கு உபதேசம் வாய்க்கு எளிது' என்ற சொல், இன்றைய இந்திய அரசியலில் வெகுவேகமாக உலவுகிறது! அமைச்சர்கள்—முனிசிரேஷ்டர்களாகிறார்கள், மனிதாபிமானம் குறித்துப் பேசுகிறார்கள்-ஏழையென்று பார்க்காதேப்பா, எல்லோரையும் மனிதர்களாக நடத்து என்று 'இதோபதேசம்' செய்கிறார்கள்!

முன்னாள் கவர்னர் ஜனரல் ஆளவந்த ஆட்சி, மக்களைப் பொறுத்தே இயங்கும் என்கிறார்.

காட்கில் கருணோபதேசம் செய்கிறார். பிரசாத், பிரியமொழி சொல்கிறார் 'வெளிநாட்டு மூலதனம் நல்லது' என்று, நல்லுரை கூறுகிறார், தனது மக்களுக்கு!

உபதேசங்கள் — வளருகின்றன, சொல்ல எளிதாயிருப்பதால்!

மக்கள் வாழ்வு, வேதனை நிலை போக்கும் நிரந்தர வேலைகள் பற்றி இவர்கள் நினைவில் எண்ணங்கள் எழும்பவில்லை! அது குறித்துப்பேசவில்லை—வழிவகை கூற முயலவில்லை. ஆனால் வெகு எளிதில் இதோபதேசம் செய்கின்றனர் — மக்கள் எப்படியோ அப்படித்தான் ஆட்சி இருக்கும், தொழிலாளர்களை மனிதரைப்போல நடத்துங்கள், வெளிநாட்டு மூலதனத்தை வெறுக்காதீர் என்று!

அமைச்சரும் ஆளவந்தாரும் இந்த உபதேசங்கள் மூலம் — உபதேசம் செய்துவிட்டுப்போன 'புண்ணிய புருடர்களின்' பட்டியலில் வேண்டுமானால் தங்கள் பெயரை பொறித்துக்கொள்ளலாமே தவிர, உயிர்ப் பிரச்னைக்கு முடிவு காண முடியாது!

உபதேசிகளையும் முனிசிரேஷ்டர்களையும் பார்க்காத நாடல்ல, காணாத பூமியல்ல, இந்தப் 'புண்ணிய'பூமி!

அந்த உபதேசங்களும் இதோபதேசங்களும் இன்று—உலவவில்லை, உயிரற்றவைகளாகிவிட்டன!

எனினும், இவர்கள்—புது பூலோக சிரேஷ்டர்கள் — புறப்படுகிறார்கள்; புண்ணிய போதனைகளைப் பேசுகிறார்கள்!

உபதேசங்கள் பயன்தராது—இனி உலகை உய்விக்கும் வழிகள்தான் வேண்டும், வாய்க்கூச்சல் அல்ல!

—✻—

அந்தச் சம்பவம்!

—()—

கேட்டது இந்தியில், கிடைத்தது தமிழில்! கடந்த 23-ந்தேதியன்று இந்திய சட்டசபையில் நிகழ்ந்த ரசமான நிகழ்ச்சி இது.

ரயில்வே வரவு செலவு திட்டம் குறித்து விவாதம் நடைபெற்றபோது ராஜஸ்தானைச் சேர்ந்த கோகுல்பாய்பட் என்பவர் ரயில்வே மந்திரியாரை ஒரு கேள்வி கேட்டாராம்—கேள்வி இந்தியிலிருக்கவே, திண்டாடிய மந்திரியார் தமிழில் பதில் தந்தாராம்—இச் சம்பவம் சபையில் நகைச்சுவையைச் சிருஷ்டித்ததாம்! தமிழில் பதில் தந்த ரயில்வே மந்திரி கோபாலசாமி அய்யங்கார்—காஷ்மீரத்தின் திவானாகவும், இன்னும் பலபதவிகளிலும் பல ஆண்டுகள் வடநாட்டிலிருந்து வருபவர்—இந்தி 'வாலாக்'களைச் சந்தித்துப்பேசி வருபவர். அவருக்கே 'இந்தி' கேள்வி புரியவில்லை — சுடச்சுட 'தமிழில்' புரியவில்லையேயெனக் கூறி, கேட்டவருக்குப் புத்திபுகட்டியுள்ளார்!

சம்பவம் ரசமானதுமட்டுமல்ல—நல்லபடிப்பினை தருவது, இந்தி 'வெறி'யர்களுக்குப் புத்தியூட்டுவது. எவ்வளவுதான் முயன்றாலும், எத்தனையோ மொழிகள் நிரம்பிய இந்நாட்டை 'இந்திக்கு' அடிபணிய வைப்பது இயலாது என்பதை உணர்த்துவது!

அங்கே, அது!

தரிசாகிக் கிடந்தது, கவனிப்பாரில்லை—என்றும் இது எங்களுடைய ஆஸ்தி என்று சொல்லிக்கொண்டனர்!

இந்த ஆஸ்தியில் 20,000 ஹெக்டேர்கள் (சுமார் 50,000 ஏக்கர்) நிலத்தை அண்மையில் குடியானவர்களும் வேலையில்லாது திண்டாடும் விவசாயிகளும், தங்கள் வசப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். இது போன்ற நிகழ்ச்சிகள் அங்கே அடிக்கடி நடந்துவருகிறது, எனினும் இந்தச் சம்பவம் மிகவும் குறிப்பிடக்கூடியதாம்!

சம்பவம் நடந்தது இங்கே அல்ல; இத்தாலியில்!

புதிய வெளியீடுகள்!

சி. என். ஏ. நீட்டியவை

செல்லப் பிள்ளை
சிந்தனை விருந்து (2-ம் பதிப்பு)
வாழ்க்கைப் புயல் ,,

விற்பனையாளர்
பரிமளம் பதிப்பகம்
காஞ்சிபுரம்.

வள்ளல் மறைந்தார்!

“என் காலத்தில் ஏற்பட்டுவிடுமா? என் கண்ணால் பார்த்துவிடுவேனா? அதற்குள், அமைந்துவிடுமா, கல்லூரி—சொல்லுங்களேன் ஒரு வார்த்தை! துணிவாகச் சொல்லுங்களேன்!”

“கட்டிடம் அமைக்க மட்டும் ஆயத்தமாகிவிடட்டும். நான் அங்கேயே போய்விடுகிறேன், என் மனைவியோடு! சிறு குடிசை போதும்—என் ஜீவியத்தை அங்கேயே கழித்துவிடுகிறேன்!”

கொஞ்சங்கூட ஓய்ந்ததில்லை—எப்போதும் எந்நேரமும் சதா சிந்தனை! இன்று இத்தனை ரூபாய் வசூல்—நாளைக்கு எங்கெங்கு செல்லவேண்டும் என்று சொல்லித் திருப்திபடுவதிலே ஒரு ஆனந்தம். அல்லும் பகலும் அலைந்தார், வெறிபிடித்தவர் போல அலைந்துகொண்டே இருந்தார். தனக்கென இருந்த சொத்து 50,000 ரூபாயையும் அளித்துவிட்டு, கல்லூரி ஒன்றைக் காஞ்சியில் உருவாக்க வேண்டும் என்பதற்காகக் கஷ்டப்பட்டார்.

“இந்த மாதத்துக்குள் ஒன்றரை இலட்சமும் சேரவில்லையென்றால்—அந்த ஏக்கமே போதும், நான் திடீரெனச் செத்துவிடுவேன்!” என்று வாய்விட்டுச் சொல்வார். அவரைக் காணும்போது, ஒரு பூரிப்பு ஏற்படும். உடனே அனுதாபம் மலரும்; ‘அடடா! தள்ளாத வயது. வீட்டிலே கிடக்கவேண்டியகாலம். இப்படி அலைகிறாரே! என்ன ஆசை இவருக்கு, இவ்வூரில் ஒரு அறிவாலயத்தை அமைப்பதில்!’ என்றஎண்ணத்தால்!

அவர், கிடைத்தற்கரிய மாணிக்கமாயிருந்தார். காஞ்சி மக்களின் இதயத்தில் ‘கந்தசாமி முதலியார்’ என்ற பெயர் செதுக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

அத்தகைய வள்ளல், திடீரெனப் போய்விட்டார், காலம் அவரைப் பிரித்துவிட்டது. எதிர்பாராத நிலை 8-3-'50 அன்று இரவு 12¼ மணிக்கு மாரடைப்பால் அவர் மரணமடைந்து விட்டார்!

இரவு மணி ஒன்பது இருக்கும், அலுவலகம் வந்து, மறுநாள் யாரா ரைப் பார்ப்பது என்பது குறித்துப் பேசியிருந்து விட்டு ‘காலையில் வருகிறேன்’ என்று சொல்லிச் சென்றார்.

காலை மலர்ந்தது—அவர் வரவில்லை—இதயத்தைத் தாக்கும் ‘இழவு’ச் செய்திதான் வந்தது!

பணம் படைத்தோரில், கந்தசாமி யாரைப் போன்றோரைக் காண முடியாது. கல்லூரிக்கென, பணம் கொடுக்கும் ‘கனவான்’களைக் காண முடியாது. காளி கோயில் அபிஷேகத்துக்கும் ‘கண் போன’ காமாட்சிக்கு மறு கண் ஓட்டும் திருப்பணியிலும் ஈடுபடும் ‘மகாராஜர்களே’ அதிகம் இருப்பதால்!

வீண் விழா, வேடிக்கைச் செலவு, இவைகளை நீக்கி அவர் சேர்த்துச் சேமித்த தொகைதான் கல்லூரிக்கென அவர் தந்த ஐம்பதினாயிரமும்!

அத்தொகை முழுவதையும் காஞ்சியில் ஒரு கல்லூரி ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக அவராகவே முன்வந்து தந்தார்—தந்ததோடு மட்டுமல்ல, கல்லூரி ஏற்பட்டுத் தம் கண்ணால் காணவேண்டு மென்பதற்காக அல்லும் பகலும் பாடுபட்டார். படிகள் ஏறியிறங்கினர், பலரைப் பார்ப்பதும் அவர்கள் ஒத்துழைப்பைப் பெறுவதுமே தனது ஓயாத வேலையென எண்ணிப் பாடுபட்டார்!

காணக் கிடைக்காத பெரியார், தேடினாலும் அகப்படாத தங்கம்—இறந்துவிட்டார். எதிர்பாராத சோகச் செய்தி இது, காஞ்சியைக் கலங்கச் செய்வது!

பிறக்கும்போது மனிதன் அழுதுகொண்டு பிறக்கிறான், சாகும்போது அவன் அழுதுகொண்டு சாவதில்லை—அவன் சாதித்த செயல்கள் அவனைச் சுற்றி நிற்கின்றன!

கந்தசாமி அவர்கள் மறைந்துவிட்டார். ஆனால் அவரது புகழ் அவர் பெயருடன் ஒன்றிக் கிடக்கிறது. காஞ்சி மக்கள் இதயத்தில் செதுக்கப்பட்டு விட்டது.

அவருடைய பிரிவு, பெரிய நஷ்டம். அவர் ஆசையைப் பூர்த்தி செய்து, காஞ்சியில் கல்லூரி நிறுவ ஆவன செய்வதே, மறைந்த அந்தச் செயல் வீரருக்குக் காஞ்சி மக்கள் காட்டும் மரியாதை.

அவர் ஆரம்பித்து வைத்த, அறிவாலயப் பணியை முடிக்கவேண்டும்—அவருடைய ஆன்மா சாந்தியடையும் என்பதற்காகவல்ல! பொதுநல ஆசையுடன் முன்வந்துழைத்த ஒரு பெரியார் துவக்கிய காரியத்தை முடித்து, ஒரு கல்லூரியை நிறுவினோம் என்ற மனத் திருப்திக்காக!

கந்தசாமி அவர்களது எதிர்பாராத முடிவு, கல்லூரி செயற்கமிட்டியாருக்கும், ஏனைய நண்பர்களுக்கும் ஈடுகட்ட முடியாத நஷ்டமாகும்.

கணவனை இழந்த கந்தசாமி அவர்களது மனைவியாருக்குநமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, மறைந்த வள்ளல் எடுத்துக்கொடுத்த அறிவாலயப் பணியை முடித்து காஞ்சி மக்களுக்கென கல்லூரியொன்றை அமைப்பதில் என்றும்போல நம் தொண்டு உண்டு எனக்கல்லூரிக்கமிட்டியாருக்கும் நமது சோகம் கலந்த அனுதாபங்களுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

வாழ்க கந்தசாமியார் புகழ்!
வளர்க அவர் விட்டுச் சென்ற பணி!!

சந்தாதாரர்களுக்கு

“திராவிட நாடு” சந்தாதாரர்கள்; சந்தா சம்பந்தமாகக் கடிதம் எழுதும்போது சந்தா எண்ணைக் குறித்தெழுத வேண்டும். சந்தா எண் குறிப்பிடாத கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா. சந்தா முடியும் தேதி ஒவ்வொரு முகவரிக்கு அடியிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைப் பார்த்துச் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளவும்.

மானேஜர்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

யவைகளை நன்கு கற்றான். அறிஞர்களாக விளங்கிய அரிஸ்டாடல், டிகாரடீஸ் போன்றார்களின் நூல்களை மிகவும் விரும்பிக்கற்று சிறந்த தத்துவங்களை அறிந்தான்.

மோலியர் தத்துவ ஞானி! வெறும் தத்துவஞானியல்ல. உலகின் சுகதுக்கங்களைக் கண்டறிந்து உள்ளம் நொந்து போனவன்.

உலகத்தை நாடக மேடையில் சிருஷ்டித்துக்காட்டினான். நல்ல சிந்தனையாளன். மனிதர்களின் சிந்தனா சக்திகளைக்கிளறி விட்டான்.

கீழ்த்தரமான பேச்சுகளை அவனிடம் காண்பதரிது. படித்த அறிஞர்களை காண்பதும் அவர்களோடு பேசுவதும் அவனுக்கு மிகவும் பிடிக்கும். எதையும் நல்ல நகை ததும்பப் பேசுவான். அவனது நகையில் கேலியும் கிண்டலுமட்டிலுமிருக்காது. ஆழ்ந்த கருத்துகள் கொண்ட சிந்தனைச்சுடர்களாக இருக்கும். பகைவர்களாயினும் அன்புடன் உபசரிக்கும் அரிய குணங்கொண்டவன்.

மோலியர், தன் பத்தொன்பதாவது வயதில் கல்லூரிப் படிப்பை முடித்துக் கொண்டான். ஆனால் தன் வாழ்க்கைக்கு நல்ல வருவாய் தரக்கூடிய உத்தியோகம் எதுவும் கிடைக்கவில்லை. எனவே திரும்பவும் படிக்க ஆரம்பித்தான். சட்டம் படித்து முடித்து விட்டு ஆர்லியன்ஸில் சிறிதுகாலம் வக்கீல் தொழிலை நடத்திவந்தான். வக்கீல் தொழிலை நடத்திவரும் போது மனிதர்களின் வாழ்க்கையில் உள்ள விநோதங்களை அறிந்தான். மோலியர் தன் வாழ்வைப்பற்றி ஆழ்ந்து சிந்தித்தான். அவனது மனம் எதிலும் நாட்டங் கொள்ளவில்லை. கூலிக்குப் படுக்கை விரிப்பதும் வக்கீல் தொழில் நடத்தி பொய்யை மெய்யாகவும் மெய்யைப் பொய்யாக்குவதும் அவனுக்குப் பிடிக்கவில்லை.

சமுதாயத்தைப் பார்த்தான். அது சீர் கெட்டுக் கிடந்தது. அதைத் திருத்தியமைக்க சுலபமான வழிதேடினான். பிரான்ஸ் தேசத்தில் அப்பொழுது, நாடகம் என்றால் நடக்குமிடம் எத்தனை மைலாக இருந்தாலும் சென்று பார்த்து விடுவார்கள், மக்கள்! நாடகத்தை பெரிதும் விரும்பினார்கள். இதை அறிந்த மோலியர் நாடகமேடை ஏறினான். தானே நாடகத்தை எழுதி நடிக்கத் துவங்கினான்.

மக்கள் நாடகத்தைக்கண்டு களித்தார்களேயன்றி, அந்த நாடகக்காரர்களை மிகவும் கேவலமாக நினைத்து வந்தார்கள். மோலியர் நாடகமேடை ஏறுவதைப்பார்த்த அவனது உறவினர்களும் நண்பர்களும் தடுத்தனர். மோலியர் கேட்கிறவனா? அதனால் அவர்கள் இவனை பகிஷ்கரித்து விட்டனர். "யார் எதை வேண்டுமானாலும் செய்யுங்கள். ஆனால் நான் மட்டும் நாடகம் நடிக்காமலிருக்க மாட்டேன்" என்று கூறி விட்டான். தன் தாயார் மூலம் கிடைத்த நில வருமானத்தை மூலதனமாகக் கொண்டு மோலியர் ஒரு நாடகக் கம்பெனியை ஆரம்பித்தான். சமுதாயத்தில் மலிந்து கிடக்கும் ஊழல்களை நகை ததும்பும் நாடகங்களாக உருவாக்கினான்.

நாடகம் நடத்த அக்காலத்தில் எந்தவிதமான வசதியும் இல்லை; நம் நாட்டில் தெருக்கூத்து நடத்துகிறார்களே! அப்படித்தானிருக்கும். மெழுகுவத்திதான் அங்கு விளக்கு. இவ்வளவையும் சமாளித்துக் கொண்டு மோலியர் நாடகம் நடத்தினான். பிரான்சில அதிகாரதேவதைகள், அப்பொழுது எதைவேண்டுமானாலும் செய்யலாம். அதனால்முதலில் அந்தத்தேவதைகளின் நல்லெண்ணத்தைப்பெற்றாகவேண்டும். ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குப் போகவேண்டுமானால் கழுதைமேல்தான் மூட்டைகளைப் போட்டுக் கொண்டு போகவேண்டும். எந்தவிதமான போக்குவரத்துச் சாதனமும் கிடையாது.

நாடகக்கம்பெனி ஆரம்பித்த மோலியர் மக்கள் செல்வாக்கைப் பெற்றிருக்கவில்லை. ஏனென்றால மோலியரின்பாதை அவர்களின் நல்லெண்ணத்தைப் பெறக்கூடியமுறையிலில்லை. மோலியரின் பாதை கரடுமுரடானது. யாரும் எளிதில் பின்பற்றமுடியாதது. என்றுஎல்லோருக்கும் முதலில் தோன்றிற்று. அவனது நாடகங்களைப் பார்த்த பாமர மக்கள் மிகவும் பாராட்டினார்கள் நாளடைவில் மோலியர் புகழ் திக்கெட்டும் பரவிற்று.

மோலியருக்கு மிகவும் உதவியாக இருந்து நாடகத்தில் பங்குகொண்டவன் பேழார் என்பவன். அவன் மிகவும் ஏழை. அவன் தன்னுடைய ஒருடஜன் குழந்தைகளுடன் நாடக மேடையில் தோன்றினான். இந்தப் பெழரின் மகள் மடலேன் நடிப்பில் மிகவும் கெட்டிக்காரி. இவள்தான் மோலியரின்நாடகங்களில்கதாநாயகி. மோலியரை உயிராக நேசித்தாள்.

மோலியரின் புகழ் பரவுவதைக் கண்ட சிறுமதியாளர்கள் பொறாமை கொண்டு அவனுக்குப் போட்டியாக கிளம்பி பலதொல்லைகளை உண்டாக்கினார்கள். தொழில் தோல்வியடைந்தது! கடன் வாங்கித்தான் தொழில் நடத்தமுடிந்தது. பொறாமைக்காரர்களின் சதிவேலையால்மோலியர்நாடக மேடையில்ராஜாவேஷத்திலிருக்கும் போதே கடன்காரர்களால் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டான். நாடகக்கம்பெனி சீர் குலைந்தது. நண்பன் ஒருவன் மோலியரின் கடனை அடைத்து சிறைமீட்டான். கையில் தம்பிடியில்லை. பார்க்குமிடமெல்லாம் பகைவர்கள்! சீமான்களின் ஆதரவும் மோலியருக்கில்லை. மோலியர் தளரவில்லை திரும்பவும் நாடகம் நடத்தினான். காசு கொடுக்காமலே எல்லோரும் பார்த்தனர். பழைய சட்டைகள்தான் பரிசு! கைதட்டல்தான நாடகத்துக்குப் பாராட்டு!

அப்போது பிரான்சில் சில இடங்களில் உள்நாட்டுச் சண்டை நடந்து கொண்டிருந்தது. மந்திரிகள் இராணுவத்தை உபயோகப்படுத்தினர். பிரபுக்கள் தங்கள் கையாட்களை உபயோகப்படுத்தினர். வெளியில் வந்தால் போச்சு! இந்த நிலையில் பாரிஸில் தொழில் நடத்தமுடியவில்லை. ஆகவே 1646-ல் மோலியர் பாரிஸ் நகரத்தைவிட்டு, கிராமம் கிராமமாக சுற்றுப்பிரயாணம் செய்து நாடகம் நடத்தினான்.

கிராமங்களில் நாடகம் நடத்த இடம் கிடையாது; தங்குவதற்கு வீடு கிடையாது. நடிப்பவர்களிடையே போட்டா போட்டி, சண்டை, இந்த வழக்குகளைத் தீர்க்கவேண்டும் ஊரிலுள்ள காலிகளின் கலாட்டா வேறு. அவர்களை சரிபண்ண, பணம் வாங்காது நாடகம் பார்க்க அனுமதிக்கவேண்டும். நாடகத்தில் குற்றம் கண்டுபிடித்துக் கூச்சல் போடுவார்கள். பார்ப்பவர்களுக்கு விறுவிறுப்பு ஏற்படுகிறமுறையில்நாடகம் அமைக்கவேண்டும். இல்லையென்றால்

விளக்கை அணைத்துவிடுவார்கள். கல்வீசுவார்கள், கொடுத்த பணத்தைத்திருப்பிக் கொடு என்பார்கள். உத்தியோக தேவதைகளின் உத்திரவு வேறு பெற்றாகவேண்டும். இல்லை என்றால் நாடகம் நடத்தமுடியாது. அவர்கள் கையில் ஏதாவது கொடுத்தாகவேண்டும். இத்தனை கஷ்டங்களுக்கிடையில் மோலியர் பொறுமையுடன் நாடகம் நடத்தி வந்தான்.

பழையநாடகங்களை விடுத்து, மோலியர்தானே புதுவிதமான நாடகங்களை எழுதினான், கஷ்டப்பட்டான். உலகத்தில் நடமாடும் மனிதர்களை நாடகமேடையில் சிருஷ்டித்தான், காலத்துக்கேற்ற நாடகங்களை எழுதினான். மோலியர் முதன் முதலில் எழுதிய நாடகம் "உணர்ச்சியற்றவன்" என்பது இந்த நாடகத்தை 1653-ல் லியான்ஸ் நகரில் அரங்கேற்றினான். மக்கள் சளிப்படையாதுபல தடவை பார்த்தனர். நகரில் தொடர்ந்து முப்பதுதடவை நடத்திக்காட்டினான். அந்தக் காலத்தில் ஒருநாடகம் ஒருநகரில் தொடர்ந்து முப்பது தடவை நடப்பது என்றால் முயற்கொம்பே! ஆனால் மோலியரின் நாடகம் நடந்து வெற்றி பெற்றது.

விக்டர்யூகோ, மோலியரின் "உணர்ச்சியற்றவன்" நாடகத்தைப் பார்த்து மிகவும் மெச்சியிருக்கிறார். அதுவரை வீரநாடகங்களையே பார்த்து சலித்துப்போன மக்கள் மோலியரின் நகைததும்பும் நாடகங்களை மிகவும் வரவேற்றனர். மக்களிடையே நல்ல உணர்ச்சி பெருகிற்று. மோலியரின் நாடகங்களில் எல்லா அம்சங்களும் அடங்கியிருந்தன. வெறும் காதல்வீரகாட்சிகள் மூலம் சாதிக்கமுடியாத காரியங்களை மோலியர் தன் சோக நாடகங்களாலும், நகைச்சுவை நாடகங்களாலும் சாதித்தான். மோலியரின் நாடகங்கள் பிரான்ஸ் தேசத்தில் ஒரு தனி ரகமாகத்தோன்றின. இவைகளுக்கு நாளுக்கு நாள் செல்வாக்கு அதிகரித்தது. ஆனால் நாடகக் காரனாகிய மோலியர் ஒரு பரம நாஸ்தீகன்; இவனது நாடகங்களைப் பார்ப்பதால் மக்கள் கெட்டு விடுவார்கள் என்பது எதிரிகளின் பிரச்சாரமாக இருந்தது இதனால் மோலியருக்குப் பலவிஷயங்களிலும் தொல்லைகள் பெருகியது பிரான்ஸ் ஒரு கத்தோலிய நாடாகையால் மோலியரின் நாடகங்களுக்கு எதிர்ப்புகள் பலமாகக் கிளப்ப முடிந்தது. கத்தோலிக்கர்கள் ஏறத்தாழ நம்நாட்டு இந்துமத வைதீகர்களைப் போன்றவர்கள். ஆண்டவனுக்கு ஆபத்து என்றவுடன் கத்தோலிக்கர்களின் கண்கள் சிவந்தன. சகல சக்திகளையும் கொண்ட ஆண்டவனை ஒரு மோலியர் என்ன செய்துவிட முடியும்? என்றாலும் ஆஸ்தீக சிகாமணிகளுக்கு மனம் பொறுக்குமா? கொதித்தெழுந்தனர், படை திரட்டினர்!

மோலியரின் நாடகக் கொட்டகைக்கெதிரே ஆஸ்திகர்களின் நாடகக் கொட்டகை. மோலியரின் நாடகம் பார்க்கநாலு அணாவா? எங்கள் நாடகத்துக்கு இரண்டணாத்தான்! வாருங்கள்! வந்து பாருங்கள்! என்று அழைப்பு. மோலியர் இதற்கெல்லாம் கொஞ்சங்கூட அஞ்சவில்லை. அத்தகைய எதிரிகளைத் தன் நாடகங்களில் பாத்திரங்களாக சிருஷ்டி செய்து கையாண்டு செய்தான். குருமார்களின் மூட பக்திகளையும், போலி அறிஞர்களையும், டாக்டர்களையும், பிரபுக்களையும் மோலியர் நாடகமேடைப் பாத்திரங்களாக்கிக் காட்டி மக்களை சிந்திக்கும்படித் தூண்டினான்.

பதினாலாம் லூயி நல்லகலாரசிகன் மோலியரின் நாடகங்களைப் பார்த்து மிகவும் மெச்சினான். தன் அரண்மனையிலேயே நாடகமேடையமைத்துக் கொடுத்தான். "நகைச்சுவை மணி" என்ற பட்டம் வழங்கினான். பரிசு கொடுத்தான்.

மோலியரின் புகழ் பரவுவதைக் கண்ட பொறாமைக்காரர்கள் சும்மாயிருப்பார்களா? மோலியரைப் பற்றியும், அவனது நாடகங்களைப் பற்றியும்பலவிதமான மட்டரகப்பிரச்சாரம் செய்யப்பட்டது. சமுதாயத்திலுள்ள ஊழல்களைதான மோலியர் நாடகமேடையில் காட்டினான். சமுதாயத்திற்கு திருத்தம் தேவை என்றான். இத்தனை ஆண்டுகளாக எவரும் வேண்டாத திருத்தம் இந்த மோலியர்வேண்டுமென்கிறானே! இவனைச் சும்மாவிடக் கூடாது என்று கிளம்பினர். மோலியருக்கு நாடகம் எழுதவே தெரியாது. அவனது நாடகமெல்லாம் பழைய நாடகங்களின் காப்பி. இதற்கு அரசன் பரிசளிக்கிறானே? இவன் நாடகம் நடத்துவதா? என்று அரசனிடம் சென்று முறையிட்டனர். அரசன் ஏற்றுக்கொள்ளவில்லை. பிறகு அவர்களே மோலியரைப் பற்றிக் கேலி நாடகங்கள் எழுதி நடித்தனர். 'மான்ட்ப்ளோரி' என்பவன் ஒரு நாடகம் எழுதி மோலியரைக் கேலியாக நடத்திக் காட்டி அவமானப்படுத்தினான்.

மோலியர் இதற்கெல்லாம்சிறிதும் விட்டுக் கொடுக்கவில்லை. மற்றொரு புதுநாடகம் நடத்தினான். டார்டுப் (Tartuffe) என்ற இந்தநாடகத்தில் போலிகளுக்கும், விஷமிகளுக்கும் நல்லமண்டையடி கொடுத்தான். மோலியரின் நாடகங்களுள் இதுவே தலைசிறந்தது என்றுபுகழப்படுகிறது இதை நடத்தவே முடியவில்லை. கிருஸ்துவ மதத்தைக்குழித்தோண்டிப்புதைக்க வந்திருக்கிறான். என்று எங்கும் ஒரே எதிர்ப்பு.

மோலியர் இதற்கெல்லாம் கொஞ்சங்கூட அஞ்சவில்லை. ஐந்தாண்டுகள் போரிட்டான். வெற்றி பெற்றான் அரசனின் அனுமதியின்பேரில் நாடகத்தை நடத்திக்காட்டினான். அரசன் மிகவும் மெச்சி "நடிகமன்னன்" என்ற பட்டத்தையும் ஆறாயிரம் பவுன் பரிசும் வழங்கினான். எதிரிகளின்கொட்டம்அடங்கிற்று. மோலியரின் 'டார்டுப்' என்ற நாடகத்தைப் பார்த்து ரசிக்காதவர்களே கிடையாது. டார்டுப் என்றால் "ஆஷாடபூதி" என்று அர்த்தம். மோலியர் சுமார் 25 நாடகங்கள் எழுதியிருக்கிறான். உலகநாடகஆசிரியர்களில்முன் வரிசையில்நிற்பவன். உலகசரித்திரப் புகழ்பெற்ற நெப்போலியன் தோல்வியுற்று சிறையிலடைக்கப்பட்டுக்கிடக்கும்போது மோலியரின் நாடகங்களைப்படித்து ஆறுதல் பெற்றானாம்!

மோலியர் ஒருநாடகத்தில் நடித்துக்கொண்டிருந்தபோது, திடீரென மாண்டான். காசநோய் அவன் உயிரைக்குடித்தது. அதிலிருந்துஅவன் மீளமுடியவில்லை. அவனது சபலத்துக்கு யாரும் எவ்வித ஆடம்பரமும் செய்யவில்லை அவனைப் புதைத்த இடத்தில் ஒருசாண்கல்லை நட்டனர். கொஞ்சக்காலத்தில் அது இருந்த விடம் தெரியாமல் மறைந்துபோய் விட்டது. ஆனால் அவன் வைத்து விட்டுப் போன கலைப் பொக்கிஷங்கள் என்றென்றும்மறைந்துவிடாது.

✲

மனப்போர்

தில்லை வில்லாளன்

வானத்தைப் பார்த்துக்கொண்டிருந்தாள் பாக்கியம்.

நட்சத்திரச் சரத்தை அறுத்துக் கொட்டிவிட்டு குழந்தை சந்திரன் அவைகளைப் பொறுக்கித் தொடுக்க ஓடிவந்து கொண்டிருந்தான்.

"அம்மா சாப்பிடவில்லையா......"

தங்கம்மாள் குரலைக் கேட்டு திடுக்கிட்டு எழுந்தாள். அப்பொழுது தான் சுவரில மாட்டியிருந்த நாழிகை வட்டில் டண், டண்...என ஒன்பது மணியடித்தது! அதுவரையிலும் அவள் மனம் எங்கெங்கோ சுற்றி வந்து நின்றது.

இரவு உணவை ஒப்புக்குமுடித்துவிட்டு படுக்கையறையினுள் நுழைந்தாள். அங்கு விரித்துக் கிடந்த அதன் தலைப்பு அவளை மிகவும் பற்றி இழுத்தது. 'மனப்போர்'— அமரன் என்ற ஆசிரியன் எழுதியது! ஏடுகளில் ஒன்றைப் பிரித்தாள் இரண்டொரு தினங்களுக்கு முன்தான் வாங்கிவந்தாள். ஆனால் படிக்கவில்லை! அவளது கண்கள் எழுத்து வயலில் மேயத் தொடங்கின. ஆனால் அவளுக்கு எதுவும் புரியவில்லை. பிறகு விளக்கையணைத்து விட்டுப் படுத்துக்கொண்டாள். தூக்கம் ஒரு பிடிவாதமான குழந்தை வாரேனென்று அதட்டும் பொழுது அழுதுகொண்டாவது மடியில் வந்து உட்கார்ந்து கொள்ளும். வா, வா என்று அழைத்தால் தெருவிலோடி விளையாடும்! பாக்கியம் புரண்டு புரண்டு படுத்தாள். வெகு நேரம் வரை நித்திரை வரவேயில்லை. கடைசியில் உறங்கினாள்......உறங்கினாள்...உறங்கியே விட்டாள்! தூக்கத்திலும் நம்மை விடுகிறானா நினைவெனும் கொடூர சிந்தனையாளன்...

அந்தக் கடிதம்

அந்தக் கடிதத்தை எழுதி மாணவ விடுதியின் முன்னுள்ள அஞ்சல் பெட்டியில் போட்டதிலிருந்து சேரனின் மனம் குதித்தது, கூத்தாடிற்று......சற்று தாமதித்து அஞ்சி நடுங்கி யொடுங்கியது! பாக்கியத்தின் காதலைப் பெறும் பாக்கியமிருந்தால் மகிழ்ச்சிதான்...நேரில் சென்று நிற்கும்பொழுது பழைய நிகழ்ச்சிகளின் எதிரொலி போல சிற்றத்தால் கூற்றம் போல நின்றுவரவேற்றால்...? ஆகவே தான் தீவிலே சிக்கிய மாலுமியைப்போல அவன் மனம் திக்கு முக்காடிற்று! அதனால்தான் மாடியிலிருந்து அந்த அஞ்சல் பெட்டியை...அதற்கு யார்தான் இரத்த நிறத்தைப் பூச வேண்டும் என்றுசொன்னார்களோ... அவர் மட்டும் கிடைத்தால் அவர் புத்திக்கு மெச்சி ஒரு சிகப்பு பட்டுக்கைக் குட்டையைப் பரிசளிக்கலாம்!...பயத்தோடு அவன் பார்த்தான். அது தன் குரிதிக் குரிஞ்சிப்பால் அவனைக் கேலியோடு பார்த்தது. சிகப்புக் கொடியைக் காட்டினால் புகைவண்டி நின்றுவிடுகிறது. அதுபோல அந்த 'டேஞ்ஜர் சிக்னல்' அவனது மன வண்டியைச் சட்டென்று நிறுத்திவிட்டது!

அந்த அஞ்சல் பெட்டி...சாதாரண பெட்டியா அது......இல்லை, இல்லை அது, எலியா கூறியதுபோல எதையும் விழுங்கிடும் துவாரப் பெட்டி மட்டுமல்ல, அது ஒரு தனியுலகம்! அங்கு எதையும் பார்க்கலாம். மண்ணைத் தின்ற கண்ணன் வாயில் ஈரேழு உலகங்களையும் பார்த்தாளாம் அவனது வளர்ப்புத் தாய்...ஆனால் இதன்வாயை மட்டும் திறக்கச் செய்து பார்த்தால் வாழ்க்கை யென்ற உலகத்தையே பார்க்கலாம்! பணமனுப்புக...என்ற விண்ணப்பங்கள் மட்டுமல்ல அங்கு நிறைந்திருக்கும் கடிதங்கள்! கல்லூரிகளிலிருந்து செல்லும் கடிதங்களை மட்டும் பொறுக்கி எடுத்துவைத்துப் பேசுவோம்! 'ஜாஸ்மைன்' வாசனை நீரை எடுத்துப் பூசிக்கொண்டு அந்தக் கையுடனே எழுதிய கடிதங்கள் இருக்கும்...இம்மாதம் இருநூறு ரூபாய் அனுப்பினீர்கள், இரண்டு 'ட்வீட் பேண்ட்டுகள்' தைத்துவிட்டேன். 'வெல்வெட் கோட் வேண்டும் ஆகவே உடனே இன்னும் நூறு ரூபாய் அனுப்புங்கள் என்ற கட்டளைக் கலிப்பா பாடுவன உண்டு. கடிதங்களில் கண்ணீர் சொட்டுகளை தெளித்து அனுப்பியவையும் உண்டு...அப்பா இன்னும் 'ஸ்காலர் ஷிப்' வரவில்லை. நீங்கள் இருந்த ஆடுகளையும், அம்மாவின் அந்த நாள் தோடுகளையும் வைத்துக் கொடுத்த எழுபத்து இரண்டுரூபாய்களும் தீர்ந்துபோய் நாட்கள் பலவாகி விட்டன. இன்னும் ஒரு வாரத்தில் எப்படியும் சம்பளச் சலுகை வந்துவிடும் என்கிறார்கள். எப்படியாவது இன்னும் பத்து பதினைந்து ரூபாய் அனுப்பினால் பணம் வந்ததும் திருப்பியனுப்பிவிடு

கிறேன்...இந்த இயக்கந்தான் ஏராளம்! குமரிகளுக்கு தூது மடல்கள் இருக்கலாம்......முறிவுச் சீட்டுகளும் பல காணக் கிடைக்கும்! பத்திரிக்கைகளுக்கு கட்டுரைகள், கதைகள்......'மேடை'யோ'வுக்கு நாடகங்கள், பேச்சுகள்......இப்படிக்கிடைப்பது அரிதிலும் அரிது! ஆகவே அதனை அஞ்சல் பெட்டியென்று அழைப்பதைவிட தூதுவர் கூடாரம் என்று சொல்லலாமே......!

சேரன் கடிதத்தைக் சேர்த்த பிறகே சிந்தித்தான். போட்டது சரியா, தவறா என்று முடிவுகட்ட முடியவில்லை. ஆனால் அந்தக் கடிதம் அவசரத்தின் குழந்தையல்ல, ஆர அமரயோசித்தபின் ஏற்பட்ட திடமுடிவின் அறுவடை! எத்தனை முறை எழுதியெழுதிக் கிழித்துப் போட்டிருப்பான். கடைசியாக அமைந்த வார்த்தைகளையே அந்த அஞ்சலட்டையில் எழுதினான். அதை அறுபது தடவைகளுக்கு மேல் படித்திருப்பான். ஆனால் இன்னமும் அவன் மனம் அமைதியடையவில்லை!

அப்பொழுதுதான் சுருருளை வண்டியில் வந்து சேர்ந்தான் நீலன். அவன் நகரத்திலிருந்து வந்து படிப்பவன். அவன் சேரன் அறையிலேயேதான் வழக்கமாகத் தங்குவான். அன்று விடுமுறையாக இருந்தும் வந்து சேர்ந்தான். நூல்நிலையத்தில் ஏதேனும் ஏடுகளை புரட்டி அறிவை நுழைந்து கொள்ள வேண்டுமென்று வந்திருப்பான். நீலனைக் கல்லூரியில ஆச்சர்யக் கண்களுடன் பார்ப்பர். பொறுமைக் கண்களும் உண்டு...... ஆளவில் குறைவு!

பலர் அவனிடம் பேசவிழைவர் ஏன்? குறைந்த வார்த்தைகளில் அழகாக எதையும் விளக்கிடுவான். சேரன் அவனைக் கண்டதும் கொஞ்சம் ஆறுதலடைந்தான். அவனிடம் உள்ளதைக் கூறி அவனது அறிவுரைகளைக் கேட்டுத் தெளியலாம் என்று எண்ணி மகிழ்ந்து அவனை அன்பு ததும்ப, ஆர்வம் வழிய, வழிய சிரிப்பு குலுங்கி நடக்க வரவேற்றான்.

இருவரும் அறைக்குச் சென்றனர்.

"சேரா......இன்று காரகா எழுதிய "நான் கண்ணீரைச் சிந்தினேன்" என்ற ஏட்டைஎப்படியாவது தேடிப் பிடித்து எடுத்து விடவேண்டும்" என்றான்.

"புத்தகப் பித்து......படிப்புப் பைத்தியம்"

"என்னப்பா, சீறி விழுகிறாய்? உன் முகம் வாடியிருக்கிறது. காரணம் யாதோ...?" நீலன் கேட்டான் பரிவோடு!

"நீலா, என்மனம் இன்று ஒரு களம்......அங்கு போர் நடக்கிறது ......மனப்போர் நண்பா, எண்ணச் சண்டை, கருத்து 'குஸ்தி,' சிந்தனை யுத்தம்!......"

"மனப்போர்......அதென்னப்பா ......போர் அலக்சாந்தர் சண்டையா?"

"கேலியா......"

"எந்த இராசா, எந்த இராசாவோடு சண்டை போடுகிறார்...... எந்த மண்ணைப்பிடித்து, எந்தபெண்ணைத் தூக்கிவர........விளக்கமாகச் சொல்லப்பா!"

"நீலா......கிண்டல்போதும் உள்ளதைச் சொல்கிறேன்........கேட்பாயா?......"

நீலன் மேலாக்கையைச் சுருக்கிக் கொண்டான். அவனது கண்கள் அகலவிரிந்தன. நெற்றி சுருங்கி விரிந்தது! சேரன் ஏதோ ஒருநிகழ்ச்சியால மிகவும் தத்தளிக்கிறான் என்றுமட்டும் புரிந்தது! ஆகவே சேரன் பேசிய வார்த்தைகளைபொறுமையோடு கேட்டான். மனம், மணிமேகலையின் கையிலிருந்த கின்னியைப்போல விசித்திரமான பாத்திரம்! துன்பச்சோற்றை அள்ளிக் கொடுக்க கொடுக்க குறையும், பிறகு மறையும்......மடிந்தேவிடும். ஆனால் இன்பச்சோற்றை எடுத்துப் பகிர்ந்தளிக்க அளிக்க வளரும், பெருகும்! அதனையுணர்ந்தே நீலன் சேரனின் துன்பச்சோற்றை செவியேந்தி வாங்கிக்கொண்டிருந்தான்.

"பாக்கியம் என்றொரு பெண்..." சேரனின் தொடக்கம் இப்படி.

"பெண் நச்சுமலரும், அதைமுறிக்கும் இலையுமுள்ள ஒருவிசித்திரமான கொடி"

இளந்தத்துவஞானியின் விளக்கம் இது.

"அவள் எங்கள் ஊர்...பக்கத்து வீடு......பள்ளித்தோழி...பாலபருவத்துத் துணை விளையாட்டுக்காரி!"

"ஆகவே இப்பொழுது அவள் வீட்டுக்காரியாக வேட்கைப் பிறந்திருக்குமே......!"

"அதனால்தானே இத்தனை மனத் தொல்லைகளும்......"

சலிப்போடு சொன்னான் சேரன்:

"காதல் தொல்லைகளின் ஊற்றுக்கண்......"என்றான் நீலன்.

"அது உண்மையிலும் உண்மை" என்றான் சேரன்.

"அவ்வளவு இருக்கலாமா செய்தியை தொடங்கியதை விரிவாக விளக்கமாகச் சொல்லிவிடு. பாகவதத்தை பாதியிலே முடித்தால் பாவம்......சொன்னவருக்கும், கேட்டவருக்குங்கூட!"

சிரித்தான் நீலன்.

"அவள் அழகியல்லள்!"

"அப்படியென்றால்......?"

"அவள் உருவ அமைப்பு, நன்றாக இல்லை"

"அவளது உள்ளமும், அறிவும், எண்ணங்களும் சரியான அமைப்பிலிருந்தால் போதுமே!"

"அவள் நிறம் கருப்பு"

"நிறம் அல்ல, அழகை நிர்ணயிப்பது...நிறம் மங்கும். சிவப்பு மங்கி, மங்கி கருப்பாகும். கருப்பு கருப்பாகவே இருக்கும்!"

"இருந்தாலும் அவளிடம் பாசம் வளர்ந்துவிட்டது!"

"அவள் அறிவாளியாக இருப்பாள்!"

ஆம், நீலா,...அவள் படித்தவள் "நர்சாக" இருக்கிறாள் திருச்சியில்!

பிறகு சேரன் பேசினான்....அவனது மனப்போரின் கடுமை முழுவதும் குறைகிறவரை பேசினான்.

(தொடரும்)

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press, [illegible] Street, Kancheepuram.